விலை ரூபா: 5.00 | பக்கங்கள்:- பத்து | Registered as a News paper in Sri Lanka


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஆவணி22 | சனிக்கிழமை (07.09.2002) | தொலைபேசி 3378 | ஒலி 262


மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2480

## அரசின் தடை நீக்கத்தை வரவேற்கின்றோம்



# விடுதலைப்புலிகள் மீதான தடையை வெளிநாடுகள் பரிசீலிக்கவேண்டும்

## சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.ஸிக்குப் பேட்டி

(நமது நிருபர்)

**அமைதி, சமாதான முயற்சிகளுக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்த புலிகள் மீதான தடை இப்போது நீக்கப்பட்டிருப்பதினால் சமாதான முயற்சிகள் உடனடியாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு பாதையைத் திறந்துவிடப்பட்டுள்ளது. இது விடுதலைப்புலிகளினால் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும் என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

கடந்த வியாழக்கிழமை அதிகாலை தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியதை அடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் லண்டன் பி.பி.ஸி தமிழோசைக்குப் பேட்டியொன்றை அளித்துள்ளார். அப்பேட்டியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் ஏற்கனவே அரசியல் வேலைத்திட்டங்களை நாம் மேற்கொண்டுவருகின்றோம்.

எமது அமைப்புத் தடை செய்யப்பட்டிருந்ததனால் பல இடங்களில், எமது அரசியல் நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும், தற்போதுள்ள சமாதான நிகழ்ச்சி முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும் முக்கியமான கருத்துக்களை எடுத்துச்சொல்ல முடியாமலும் இருந்தது.

### புலிகள் வெளிநாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கவில்லை

ஸ்ரீலங்கா அரசின் தவறான பரப்புரையின் அடிப்படையிலேயே வெளி

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடை நீக்கம்

# பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

### எச்சரிக்கிறது சிஹல உறுமய

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டமைக்கு எதிராகப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மீது வழக்குத் தொடரப் போவதாக சிஹல உறுமய எச்சரித்துள்ளது.

இல்ஙகைக்குள் தனிநாடு ஒன்று உருவாக இடமளிக்கப் போவதில்லை என அரசியலமைபபுக்கு இணங்க பாதுகாப்பு அமைச்சர் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

எனினும் தாம் செய்துகொண்ட சத்தியப்பிரமாணத்திற்கு மாறாக புலிகள் மீதான தடையை நீக்கிய தன் மூலம் பாதுகாப்பு அமைசசர் அரசியலமைப்பை மீறியுள்ளார். அதேவேளை உள்நாட்டில் தடை நீககப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாடுகளில் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீது மீண்டும் தடை விதிக்கும் சூழ்நிலை அரசுக்கு ஏற்படமாட்டாது

## பிரதமர் ரணில் நம்பிக்கை

(கொழும்பு)

டாது என்று பிரதமர் ரணில் விக்கிர

கைக்கு அழைத்து விளக்கமளித்தார்.

அரசாங்கம் தமிழீழவிடுதலைப புலிகளுடன் பரிந்துணர்வு உடன்ப

# தமிழ்க் காங்கிரஸ் எம்.பீகள் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

### பாதுகாப்பு அமைச்சரின் செயலர் இன்று யாழ். வருவார்

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சுநடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பில் பருத்தித்துறை

சாலைகளுக்கு அருகில் அமைந்துள்ள படை முகாம்களை அகற்றுதல் குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

இப் பேச்சுக்களில் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்

# சூழ்நிலை அரசுக்கு ஏற்படமாட்டாது

## பிரதமர் ரணில் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதான முயற்சி திருப்திகரமான முறையில முன்னெடுத்துச் செல்வதால் விடுதலைப்புலிகள் மீதான தடையை மீண்டும் ஒரு முறைவிதிக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படமாட்டாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பொன்றின் போது தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகை ஆசிரியர்களை அலரி மாளிகைக்கு அழைத்து விளக்கமளித்தார்.

அரசாங்கம் தமிழீழவிடுதலைப புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை ஏற்டுத்தியதை அடுத்து விடுதலைப்புலிகளின் செயற்பாடு நம்பிக்கையுணர்வை ஏற்படுத்தியிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் திட்டமிட்டபடி நடக்குமா என்று கேட்டபோது அரசாங்கம் தற்போது சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதிலேயே அக்கறையாக உள்ளது தேர்தல் குறித்து தேர்தல் ஆணையாளர் சரியான தீர்மானம் ஒன்றை எடுப்பார் என்று பிரதமர் பதிலளித்தார்.

இச் சந்திப்பின் போது அமைச்சர்

(10ம் பக்கம் பார்க்க)

### ஹாட்லி, மெதடிஸ்த பாதுகாப்பை

# கண்காணிப்புக் குழுவினர் மேற்பார்வை செய்வர்

(மந்திகை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்கள் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களின் மேற்பார்வையில் பாடசாலைக்கு செல்வதென்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

நேற்று இரு பாடசாலைகளையும் மீளத்திறப்பது குறித்து பருத்தித்துறை சிவன்கோயில் மண்டபத்தில் விசேட கூட்டமொன்று இடம் பெற்றது. இக்கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள் அபிவிருத்திச்சங்க உறுப்

(10ம் பக்கம் பார்க்க)

# 19 வது சட்டத் திருத்தத்தை தோற்கடிப்பதெனத் தீர்மானம்

### பொ.ஐ.முன்னணி எடுத்தது

(கொழும்பு)

19வது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றில் தோறகடிப்பதற்கு அனைத்துப் பேதங்களையும் மறந்து செயற்படுவதென பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

நேற்றைய தினம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

(10ம் பக்கம் பார்க்க)

## கேணல் ராஜு வுக்கு புலிகள் வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)



விடுதலைப்புலிகளின் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி சிறப்புத் தளபதி கேணல ராஜு" (அம்பலவாணன் நேமிநாதன் ஏழாலை தெற்கு சுன்னாகம்) கடந்த மாதம் 25ந் திகதி சுகவீனம் காரணமாக வீரச் சாவடைந்துள்ளார்.

குயிலன் என்று அழைக்கப்படும் இவர் விடுதலைப்போராட்டத்தில் பல போரியல வெற்றிகளுக்கு அடித்தளம் இட்டவர். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (இ)

## பாதுகாப்பு அமைச்சரின் செயலர் இன்று யாழ். வருவார்

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சுநடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றை மீளத்திறத்தல், பாடசாலைகளுக்குச் செல்லும் வீதித் தடைகளை அகற்றுதல் மற்றும்பாடசாலைகளுக்கு அருகில் அமைந்துள்ள படை முகாம்களை அகற்றுதல் குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

இப் பேச்சுக்களில் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் கலாநிதி குமரகுருபரன் ஆகியோரும் பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, அமைச்

(10ம் பக்கம் பார்க்க)

### 541 மில்லியன் ரூபா மோசடி

# முன்னாள் பிரதமர் ரட்ணசிறி கைது செய்யப்படுவார்?

(கொழும்பு)

முன்னாளர் பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்கா 541 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

றப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தில் கடந்த அரசாங்க காலத்தில் இடம்பெற்ற இம் மோசடி தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் தகவலின் அடிப்படை விடயங்களிலேயே ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்கா விசாரணைக்குட்படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந் நிதி மோசடி தொடர்பில் மேலும் சில உயர் அதிகாரிகளும் சிக்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# சமாதானப் பேச்சுக்கான அரசதரப்புப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாநதில் நடைபெறவுள்ள நேரடிப் பேச்சுவார்த்தைக்கு அரசதரப்புப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் செயலர் பிரட்மன் வீரக்கோன் அறிவித்துள்ளார்.

அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீஎல்பீரிஸ் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில நுட்ப அமைச்சர் மிலநத மொறக் கொட, முஸலிம்காங்கிரஸ தலைவரும் அமைச்சருமான ரவூபஹக்கீம் மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக ஆகியோரே அரசதரப்பு பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

சமாதானத்துக்கு முட்டுக்கட்டை போடும்

# இனவாதக் கட்சிகளை முறியடிக்க

# ஸ்ரீ மு. கா. உதவிக்கரம் நீட்டும்

## வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப்படும்சமாதான முயற்சிகளை முறியடிக்க இனவாத சக்திகளால் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்துக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் உதவிக்கரம் நீட்டும் என வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன்மசூர்தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் இருதசாப்தங்களாக இடம் பெற்றுவந்த நீண்டகால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவரும் நோக்குடன் அரசு தற்போது செயற்பட்டு வருகின்றது.

அதனை தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில்குழப்பும் முயற்சிகளில் சில இனவாதகட்சிகள்செயற்படுன்றன இது வேதனைக்குரியது என்று குறிப்பிட்டார்.

அது மாத்திரமன்றி பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சி பொறுப்பற்ற வகையில்செயல்படுவது குறித்தும் கவலை தெரிவித்துள்ளார்.

(உ-9)

---

## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

1. மாநகராட்சி மன்றத்தின் கட்டளைச்சட்டத்திற்கு அமைவாக அனுமதிபெறாது தொழில்கள் நடாத்துவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பின்வரும் வியாபார/தொழில்கள் நடாத்துவதற்கு அனுமதிகோரும் விண்ணப்பங்களை இன்றிலிருந்து ஒருவாரகாலத்துக்குள் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றபின்பே நடாத்தல் வேண்டும்.
   1. விடுதியுணவகம்,விடுதியகம் ஒன்றை வைத்திருத்தல்
   2. உறையகம் ஒன்றைவைத்திருத்தல்

11 நகரஅபிவிருத்தி அதிகாரசபையின் சட்டவிதிகளின் பிரகாரம் வதிவிடமாக பாவித்துவரும் ஒரு ஆதனத்தை வேறு நோக்கங்களுக்காக பாவிப்பதாயின் அதற்குரிய கட்டணங்களை இச்சபையில் செலுத்தி தொடர்பான உபவிதிகளுக்கமைவாக அங்கீரகாரத்தைப் பெற்றபின் நடாத்துதல் வேண்டும்.

மேற்படி அறிவித்தலுக்கு மாறாக நடாத்துபவர்களுக்செதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் பொதுமக்களின் தகவலுக்காக அறியத்தருகின்றேன்.

இ. இராமலிங்கம

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர ஆணையாளர்
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(கி-497.4)

---

## 2002 ஆம் ஆண்டுக்கான

### வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

## பாடசாலை உபகரணங்கள்

2002ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கு உபகரணங்கள், பொருள்கள், சேவைகளை விநியோகம் செய்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை 2002 செப்ரெம்பர் 17ஆம் திகதிக்குமுன் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். விண்ணப்பங்கள் அனுபபும்போது பதிவுக்கட்டணம் ரூபா 150/- செலுத்தவேண்டும்.

மேலும் தங்களது நிறுவனம் வியாபாரத்திற்காகப் பதிவு செய்யப்பட்ட திகதி, பதிவு எண், நிறுவனத்தின் முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகிய விவரங்களையும் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

**தேவைப்படும் உபகரணங்கள், பொருள்கள், சேவைகள் பற்றிய விவரம்**

01. காகிதாதிகள்
02. மின்சாரப் பொறிகளும், உதிரிப்பாகங்களும்
03. காரியாலய உபகரணங்கள்
04. விஞ்ஞான உபகரணங்கள்
05. கண்ணாடிப் பொருட்கள்
06. இரசாயனப் பொருட்கள்.
07. ஆரம்பக்கல்வி உபகரணங்கள்
08. மனையியல் உபகரணங்கள்
09. தொழில் நுட்பக் கல்வி உபகரணங்கள்
10 விவசாய உபகரணங்கள்
11. விளையாட்டு உபகரணங்கள்
12 சங்கீத உபகரணங்கள்
13. சமூகக்கல்வி உபகரணங்கள்
14. கணித உபகரணங்கள்
15. ஆய்வுகூட உபகரணங்கள்
16. கணனி மென்பொருள்
17. கணனி வன்பொருள்

வே. தி. செல்வரத்தினம்
வலயக் கல்விப்பணிப்பாளர்
வடமராட்சி.

(கி-4975)

---

★ பொ. ஐ. மு உறுப்பினர்கள்

## சொந்த விருப்பின் பேரில் ராஜினாமா செய்கின்றனர்?

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இராஜினாமாக் கடிதங்களைப் பெற்றுவருவதாக வெளியாகிய செய்திகளைக் கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர் மறுத்துள்ளார்.

இருந்தபோதிலும் கட்சியின் உறுப்பினர்கள் பலர் தமதுசொந்தவிருப்பின்பேரில் தமது இராஜினாமக் கடிதங்களை சமர்பபித்து வருகின்றனர் எனவும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு இதுவரைகாலமும் மறைமுகமாக ஆதரவு தெரிவித்து வந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள்வெளிப்படையாக ஆதரவு தெரிவிப்பதற்காகவே தமது பதவிகளை இராஜினாமாச் செய்கிறார்களென கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-8)

---

## புலிகள்மீதான தடைநீக்க அறிவிப்பு பொருத்தமற்றது

### இந்துப்பத்திரிகை கருத்து

(கொழும்பு)

தாய்லாந்தில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைகளில்முன்னேற்றம் கண்டு திடமான சமாதான சமிக்கைகள் தென்பட்ட பின்னர் தமிழீழவிடுதலைப்புலிகள் மீநான தடைநீக்குவது பற்றி அரசு பரிசீலனை செய்திருந்தால்அதுபொருத்தமானதாக இருந்திருக்கும்;

இவ்வாறு இந்தியாவில் இருந்து வெளிவரும் இந்துப் பத்திரிகையின் ஆசிரியத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இயக்கத்தைசட்டபூர்வமானதொரு இயக்கமாக மாற்றுவதற்காக பிரயத்தனப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் தமிழீழவிடுதலைப்புலிகள் தமது கொள்கையில் திடமாக உள்ளனர் என்பதை புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபின்னர் எவ்வித வன்செயல்களிலும் அவர்கள் ஈடுபடாது சுட்டிநிற்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-8)

---

# புலிகள் மீதான தடை நீக்கத்தை அரசியல் கட்சிகள் வரவேற்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைநீகத்தை பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் வரவேற்றுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின்இத்தடைநீக்க அறிவித்தலை அடுத்துதமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொண்டுள்ளதைக் காட்டுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்உபதலைவர்ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

இத்தடைநீக்கம்ஒரு ஜனநாயக நடவடிக்கை என்றும், அதனை தான் வரவேற்பதாகவும், தமிழ் மக்களுக்கான அரசியல் ஜனநாயக உரிமைகள் வழங்கப்படவேண்டும் எனவும் புதிய இடதுசாரி முன்னணியின்தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம், நாட்டில் ஏற்படவிருக்கும் சமாதானத்துக்கான நல்லதொரு சமிக்ஞை என புதியஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(உ-8)

---

## யாழ் ஆஸ்பத்திரியில் வாந்திபேதிக்கு 7பேர் தொடர்ந்தும் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் வாந்திபேதி நோய்க்கு 7பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்

தவிர வாந்திபேதிநோயினால் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும மூவர்சிகிச்சை முடித்து வீடு திரும்பியிருப்பதாகவும் வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்பாட்டு நடவடிக்கைகளால் வாந்திபேதி ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-6)

---

## கொலரா கட்டுப்பாட்டு நடவடிக்கை முழு அளவில்

(யாழ்ப்பாணம்)

கொலரா நோயாளர்இனம் காணப்பட்ட யாழ் மாநகர சபைப்பகுதிகளில் கொலராத் தடுப்பு நடவடிக்கைகள் முழு அளவில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்தவகையில் குருநகர்ப் பகுதியில் வீடுவீடாக கொலரா விழிப்புணர்வுப் பிரசாரம் செய்யப்படுவதுடன் கிணறுகளுக்கு குளோரின் விசிறப்பட்டும் வருகின்றது;

இதேவேளை குருநகர் சந்தைப்பகுதியில் சுகாதாரமற்ற முறையில் காணப்பட்ட இரு கடைகள் மூடப்பட்டதுடன் மனிதப்பாவனைக்கு உதவாத பாண், இறைச்சி, என்பன கைப்பற்றி அழிக்கப்பட்டும் உள்ளன.

(உ-19)

---

## 19வது அரசியல்திருத்த சட்டமூலம் நிறைவேறாது

### மங்கள தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் கொண்டு வரப்படவுள்ள 19வது அரசியல் திருத்த சட்டமூலத்துக்கு மூன்றில் இரண்டுபெரும்பான்மை வாக்குகள் பாராளுமன்றில் கிடைக்கமாட்டாதென பொதுஜனஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்களசமரவீர உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா தலைமையிலான அரசு இதனை உணர்ந்துஇத்திருத்த சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில எதிர்வரும்16ந்திகதி சமர்ப்பிப்பதால் எதுவிதபயனும் ஏற்படாது எனக்கருதி அதனை சமர்ப்பிக்காதுவிடும் முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாகவும் மங்களசமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு19வது அரசமைப்புத் திருத்த சட்டமூலத்தை சமர்ப்பித்து வெற்றிபெறட்டும் பார்ப்போம் எனவும் அவர் சூளுரைத்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி இணங்கினாலும் இணங்காவிட்டாலும் திட்டமிட்டபடி எதிர்வரும் 9ந்திகதிஇச்சட்ட மூலம்குறித்த அரசவர்த்தகமானி வெளியிடப்படும் என அமைச்சரவை பேச்சாளர் பேராசிரிர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-8)

---

### விதிக்கப்பட்ட

விளையாட்டு வீரர்களை உருவாக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டி தடையினை மீள்பரிசீலனை செய்யுமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்திடம் சம்பந்தப்பட்டவிளையாட்டுக்கழகத்தினால்கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

# சமாதானப் பேச்சு வெற்றி பெற

# பக்தி எழுச்சிப் பிரார்த்தனை

## 10 தினங்கள் இடம் பெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இம்மாதம் 16 ஆம் திகதி நடத்தவுள்ளபேச்சுவார்த்தைவெற்றி பெறவேண்டி எல்லாம் வல்ல சிவப்பரம் பொருளைத் தியானித்து எதிர்வரும்10ஆம்திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை பிரார்த்தனை நாட்களாக அனுஷ்டிக்குமாறு சகலரையும் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமும் கூட்டாக இணைந்து கேட்டுள்ளன.

இதுகுறித்து இந்துசமயப் பேரவை விடுத்துள்ள பத்திரிகை குறிப்பில்;

இலங்கைத் தீவில், நடைபெற்றுவந்த கொடிய யுத்தம் முடிவிற்கு வருவதற்கு நடைபெறப்போகும் பேச்சுவார்த்தை எமக்கு கிடைத்த மாபெரும் வரப்பிரசாதம் ஆகும். ஆகையால், இப்பேச்சுவார்த்தை வெற்றி பெற பிரார்த்திக்க வேண்டிய பொறுப்பு இலங்கைத் தீவில் வாழும் சகலஇனமதமக்களினதும் தலையாய கடமையாகும் இதனை நாமனைவரும் திரிகரண சுத்தியோடு நிறைவேற்றுவோமாக.

பேச்சுவார்த்தைபுரிந்துணர்வையும் தன்னம்பிக்கையையும் வலுவாக்கக் கூடியதாக அமைய வேண்டும். இதற்கு தெய்வத்துணையே அவசியமானது. ஆகையால், எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரை சகல ஆலயங்களிலும் விசேட பிரார்த்தனைகளை நடாத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதற்கு மேலதிகமாக 16 ஆம்திகதிமுற்பகல்10 மணிக்கு சகல ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகளை நடாத்துமாறும் 20 ஆம் திகதி பகல் சகல சிவாலயங்களிலும்ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விசேட திரவியஅபிசேகத்தைநடாத்துமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

குறித்த தினங்களில்ஸ்ரீ ருத்ர ஜெபம், திருவாசக முற்றோதல், திருமுறைப் பாராயணம் போன்றவற்றைநடத்துமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மேலும் 16 ஆம் திகதி முற்பகல் இலங்கை நேரம் மு.ப. 10 மணி தொடக்கம் 10.10 வரை அவனவரும்தத்தம்அலுவலகங்களிலும் வாசஸ் தலங்களிலும் தொழில் நிலையங்களிலும்எழுந்துநின்றுபிரார்த்திக்குமாறும் வாகனசாரதிகள் தத்தம் வாகனங்களைநிறுத்தி அந்தந்த இடங்களில் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### வலி. வடக்கு, தெற்கு பொதுஅமைப்புஒன்றியம்

## வெகுஜனப் போராட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும் வன்னியிலிருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் பெருமளவு மக்கள்மீளக்குடியமர்வதனால் அவர்களது வீடுகளையும் காணிகளையும் மீண்டும் கையளிக்கவேண்டிய அவல நிலையில் வலி வடக்குமக்கள் இருப்பதாலும் மழைகாலம் நெருங்குவதால் முகாம்களில் இருக்கும் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கவேண்டி இருப்பதாலும் விவசாயிகள் விவசாயம் செய்ய நிலமின்றியுள்ளமையும்கடற் தொழிலாளர்கள் அவல நிலையையும் போக்குவதற்குரிய நடவடிக்கைகளை படைத்தரப்பினர் எடுக்காதுவிட்டால் 13 ஆம்திகதிவெள்ளிக்கிழமை பொருத்தமான இடத்தில் வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கும் வலிவடக்கு தெற்கு பொது அமைப்பு ஒன்றியம்ஏற்பாடு செய்துள்ளது.

இது சம்பந்தமான மகஜர் ஒன்றுபடைத்தரப்பினருக்கு அனுப்பிவைப்பதென்று நேற்று முன்தினம் நடைபெற்ற ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## மூவின விவசாயிகள் சமாதானச் சுற்றுலா

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 45 தமிழ், சிங்கள முஸ்லிம் விவசாயிகள் அடங்கிய தேசிய நடவடிக்கை முன்னணி நேற்று யாழ் மாவட்டத்துக்கான சமாதானச் சுற்றுலா ஒன்றை ஆரம்பித்தது.

இவர்கள்யாழ்.மாவட்டத்தில் புலிகளின் அரசியல் துறையை சேர்ந்த பிரதிநிதிகளையும் சந்தித்துகலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் பொது நடவடிக்கைகளிலும் ஈடுபடுவர் எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்களின் சுற்றுலாவை அடுத்து யாழ் மாவட்ட விவசாயிகள் அடங்கிய குழுவொன்று இரத்தினபுரிக்கு சமாதானச் சுற்றுலா செல்லவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

### அடியளித்த இளம் பெண்ணுடன்

## சேட்டை செய்தவர் நையப்புடைக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உள்வீதியில் அடியளித்த இளம் பெண்ணுடன் சேட்டை புரிந்த இளைஞன்அயலில் நின்றவர்களால் நையப்புடைக்கப்பட்டார்.

நல்லூர்தீர்த்தஉற்சவமான நேற்று இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சுவாமி உள் வீதியுலா வந்த சமயம்,அதற்குப் பின்னால் அடியளித்த இளம் பெண்ணை தனது நேர்த்தியை தொடரவிடாது தீர்த்த நீரை ஊற்றி இடையூறு செய்வதை அவதானித்த இளைஞர்கள் சிலர் சம்பந்தப்பட்ட இளைஞனை இனம் கண்டு நல்ல பாடம் புகட்டினர்.

இதனை அவதானித்த ஏனைய பக்தர்கள் இளைஞர்களின் முன்மாதிரியைப் பாராட்டினர். (உ)

## 'லக்பிம' ஆசிரியருக்கு எதிரான வழக்கு வாபஸ்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் 'லக்பிம' பத்திரிகையில் செய்தியொன்று வெளியிட்டமைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் லக்பிம பத்திரிகையின்ஆசிரியர்பந்துல பத்மகுமார என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்பட்டதையடுத்து அவர் செவ்வாயன்று விடுதலை செய்யப்பட்டார்.

சிரேஷ்ட அரசசட்டவாதி கோதாகொட தாம் இந்த வழக்கை வாபஸ் பெறுவதாக நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ,ஜி டபிள்யூ எதிரிசிங்க ஆகியோர் பந்துல பத்மகுமாரவை விடுதலை செய்து தீர்ப்பளித்தனர்.

1995 ஆம்ஆண்டுபெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி லக்பிம பத்திரிகையில் வெளிவந்த செய்தியொன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அவதூறு ஏற்படுத்தியுள்ளதாகசட்டமா அதிபர் திணைக்களம் இவர் மீது வழக்குதாக்கல்செய்திருந்தது:

குற்றவியல்அவதூறு சட்டம் நீக்கப்பட்டகாரணத்தினாலே தாம் இந்த வழக்கை வாபஸ் பெறுவதாக சட்டவாதி கோதாகொட நீதிமன்றத்தில் தெரிவித்தார். (உ)

## சமாதானம் வேண்டி

### திரவ்யஹோம மஹாயாகம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் வெற்றிபெற்று நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவி சகல மக்களும் சுபீட்சமுடன் வாழ இறை அருள் ஆசி வேண்டி கொழும்பு - 13 கொச்சிக்கடை ஸ்ரீ தம்பையா சத்திரம் சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதிகலாநிதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் விஷேட திரவ்ய ஹோமமஹாயாகம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (உ)

## கல்விப் பணிப்பாளர்கள் படையினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களின் பணிப்பாளர்களுடனான படைத்தரப்பின் சந்திப்பு எதிர்வரும் 10 ஆம் திகதி சுபாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது

இச்சந்திப்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயங்கள் ஒவ்வொன்றில் இருந்தும் 10 அதிபர்கள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கருத்தரங்கு இதே நாளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

## இராசி பலன்

(07-09-2002)

(ஆவணி 22, சனி)

அமாவாசை மு.ப.9.29வரை

பூரம் மு.ப. 8.39 வரை

இராகுகாலம்-9.04-10.34

நல்லநேரம்-3.04-4.34

**மேடம்**

வியாபாரநன்மை, பூர்வ புண்ணியகருமம், காரியதாமதம், உடல்சோர்வு

**இடபம்**

மனச்சஞ்சலம், செய் தொழில்மந்தம், தனவிரயம், உறவினர் மனஸ்தாபம்

**மிதுனம்**

நல்லகாரியம், அன்னியர் உதவி, தொழில்மேன்மை, பொருள்சேர்க்கை

**கடகம்**

கௌரவக்குறைவு, வேலைக் கஷ்டம், வீண்விவாதம், முயற்சிதாமதம்

**சிங்கம்**

ஆழ்ந்தசிந்தை, பிரயாணம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும்

**கன்னி**

காரியஅலைச்சல், பெரியோர் மனஸ்தாபம், சுப செலவு, திடீர்நன்மை

**துலாம்**

நினைத்தகாரியம்கைகூடும், இலட்சுமிகரம், தனலாபம், குடும்பத்தில் மகிழ்ச்சி

**விருச்சிகம்**

செய்தொழில் முன்னேற்றம், அபகீர்த்தி, நல்லசம்பவம், பிறர்உதவி

**தனுசு**

புதியதொழில் சிந்தை, கட்டுப்பாடு, முயற்சிதாமதம், சிறுவியாதி

**மகரம்**

எதிர்பாராதபிரச்சினை, வேலைப்பளு அதிகரிப்பு, உடல்சோர்வு, வாகனபயம்

**கும்பம்**

ரோகநிலை, சென்றஇடத்தில் செல்வாக்கு, முயற்சி கைகூடும், போசனசுகம்

**மீனம்**

சத்துருஜெயம், காரிய சித்தி, நண்பர்கள்சந்திப்பு, மனமகிழ்ச்சி

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## புதிய துறைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முறைசாராப்பிரிவினால் இவ்வருடம் ஆரம்ப இலத்திரனியல், நூலகவியல், புத்தகங் கட்டுதல் ஆகிய துறைகளில் விரைவில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இத்துறையில் பயிற்சி பெற விரும்பும் பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (உ)

## நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

15 வருட சேவையைப் பூர்த்தி செய்த கிராமசேவையாளர்களை தரம் இற்கு பதவி உயர்த்துவதற்கானநேர்முகப்பரீட்சைஎதிர்வரும் செப்ரெம்பர் 12ஆம் திகதிதொடக்கம் யாழ். செயலகத்தில்நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்தவர்களுக்கு தனித்தனி அனுமதிக் கடிதங்கள் பிரதேச செயலகங்களூடாக அனுப்பப்பட்டுள்ளதாக அரச அதிபர் அறிவித்துள்ளார். (உ)

## தாலிக்கொடி திருட்டு

(காரைநகர்)

நித்திரையில் இருந்த பெண்ணின் தாலிக்கொடி உட்பட 18 பவுணுக்கு மேற்பட்டதங்க நகைகள் கடந்த புதனன்று இரவு காரைநகர் வாரிவளவு பகுதியில் களவாடப்பட்டுள்ளன.

ஆ. நமசிவாயம் என்பவரது வீட்டிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத் திருட்டுத் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-246)

### உதை பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதை பந்தாட்டக் லீக் நடத்தும் லீக்சுற்றுப் போட்டி இன்று பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் பி:ப 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் போட்டியில் பாடும் மீன் பி'வி.க எதிர் அரியாலை ஐக்கிய வி.க பி.ப 5.15 மணிக்கு றோயல் எ வி.க எதிர் பாடும் மீன் 'எ' வி.க ஆகியன மோதவுள்ளன. (உ-3)

### போதைப்பொருள் கடத்தலைக்கட்டுப்படுத்த

## மாலே விமான நிலையத்தில் இலங்கைப் பொலிஸார் பணி

(கொழும்பு)

மாலைதீவுப் பொலிஸாருக்கு உதவியாக, மோப்ப நாய்களுடன் மாலே சர்வதேச விமான நிலையத்தில் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பிரிவு ஒன்றை ஆரம்பிக்க இலங்கைப் பொலிஸார் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இதற்கான ஒப்பந்தத்தை இலங்கை வந்துள்ள மாலைதீவுப் பொலிஸ் ஆணையாளர் பிரிக்கேடியர் அடம் சாஹீர், உள்துறை அமைச்சின் செயலாளர் ஜுனைத் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் ரீ. ஆனந்தராஜா ஆகியோரைச் சந்தித்து மேற்கொண்டுள்ளார்.

செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம், மோப்ப நாய்களுடன், அவற்றைப் பழக்கிக் கையாளும் ஆட்களையும் இலங்கை, மாலைதீவுக்கு வழங்கும்.

இதற்கான செலவுகள் யாவற்றையும் மாலைதீவு அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# 25.08.2002 அன்று சுகவீனம் காரணமாகச் சாவடைந்த கேணல் கிட்டு பீரங்கிப்படையணி சிறப்புத் தளபதி கேணல் ராஜு அவர்களுக்கு எங்கள்

# வீர வணக்கம்



இடிவிழுத்திப் போகும்
இச் செய்தி வருமென்றா
உன்னை வழியனுப்பி வைத்தோம்.
போர் ஓய்ந்த நாளிலும்
எமக்கேன் இடிவிழுகிறது.
குருதி நரம்புகள் உறைந்து போக
நெஞ்சில் குத்திட்டி ஏறுகிறது.
கேணல் ராஜு
குயிலனெனவும் இவன் குறிக்கப்பட்டான்.
அதிகம் பேசாமல்
அதிகம் சிரியாமல்
அதிக அதிசயம் நிகழ்த்திய அதிசயன்.
தலைவனருகில் தன்னைத் தயார் படுத்தியதால்
கதிரவன் ஒளி கசிந்து ஊறியகாளை.
நுட்பமதி நிறைந்த நூதனன்
விடுதலையன்றி வேறொன்று சிந்தியா விவேகன்.
புதிய அரும்புகள் முளை கொள்ள
நாற்றங்கால் போட்ட நாயகன்.
பெருவெற்றிகள் ஒவ்வொன்றின் பின்னாலும்
இந்தப் புலி மகனின் பேராற்றலும் இருந்தது.
பகை நெஞ்சேறிய குண்டுகள் ஒவ்வொன்றையும்
இவன் கைகள் தொட்டு நீவின.
எல்லாவற்றையும் தூக்கி வைத்து விட்டு
இத்தனை அவசரமாய்
சாவு அள்ளிப் போனதை தாங்க முடியவில்லையே.
ராஜு
ஒரு களத்தில் நீ மடிந்திருக்கலாம்
நோய் தின்று போனதுதான் தாளமுடியவில்லை.
அண்ணனைக்கூட மீண்டு தரிசிக்காமல்
அகல்விளக்கே! அணைந்துவிட்டாயே.
நீவளர்த்த பயிர்களைக் கொண்டே
நின் கனவை நனவாக்குவோம்.
சோகம் கப்பிய முகத்தை துடைத்து விட்டு
உன் கனவை நனவாக்குவோம்.
அது ஒன்றே உனக்குக் காணிக்கை.
என்றாலும் உன் பிரிவெனும் கொடுமை.
நீண்ட நாளிருக்கும் எம் நெஞ்சில்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

## கேணல் ராஜு (குயிலன்)

(அம்பலவாணன் - நேமிநாதன்)
ஏழாலை தெற்கு, சுன்னாகம்

அரசியல் துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
யாழ்/ மாவட்டம்

[C/4976]

# இன்று ஒரு தகவல்

## நால்வகை மனிதர்கள்

இந்த சமுதாயத்தில் உள்ள ஜனங்களைநாலுவகையாகப் பிரிக்கலாம் என்று ஒரு பெரியவர் சொல்கிறார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்கிறார்கள் பாருங்கள். அவர்கள் முதல் ரகம். அவர்களை மேன் மக்கள் என்று சொல்லலாம். இவர்கள் எப்படி யென்றால்... நாம் கஷ்டப்பட்டாலும் சரி மற்றவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள், வாழ்க்கையைப் பொதுப்பணிக்குஅர்ப்பணிக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள். எல்லாம் இந்தரகத்தைத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அப்படிப் பட்டவர்கள் கிடைத்து விட்டால் மக்கள் அதிர்ஷ்டசாலிகள்.

ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார் ஒருவர். இன்னொருவர் பக்கத்தில் இடமில்லாமல் நின்று கொண்டேவருகிறார். இவர் பார்க்கிறார். 'சார்! நீங்கள் உட்காருங்கள்' என்றுசொல்லி அவரைத்தன் ஆசனத்தில் உட்கார வைத்து விட்டு இவர் நின்று கொண்டு வருகிறார். இவரைப் பார்த்தால் நமது கண்ணுக்கு ஏமாளியாகத் தெரியலாம். ஆனால், இப்படியானவர்களெல்லாம் மேன் மக்கள். நான்சொன்னமுதல் ரகம். சரி! அடுத்தது இரண்டாவது ரக மனிதர்கள் இவர்களைப் பொதுவாக நல்லவர்களென்றுசொல்லலாம். இவர்கள் ஒரு நியாயத்துக்குக் கட்டுப் படுவார்கள். அடுத்தவர்களுக்குக் கெடுதல் பண்ண மாட்டார்கள்... இருந்தாலும் அடுத்தவர்கள் சௌகரியமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன்னுடைய சௌகரியத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க மாட்டார்கள். பஸ்ஸில் ஒரு ஆசனத்தில் இந்த இரண்டாவதுரக ஆள் உட்கார்ந்திருக்கிறார். இன்னொருவர் ஆசனம் கிடைக்காமல் நின்று கொண்டே பிரயாணம் செய்கிறார். நமது ஆள் நிற்கிறவருக்காகப் பரிதாபப்படுவாரே தவிர எழுந்து அவரை உட்கார வைத்துவிட்டு தான் நின்று கொண்டு வர மாட்டார். அந்த அளவுக்குத் தான் தியாகி இல்லை யென்றும் சொல்லிவிடுவார். இவர்கள் இரண்டாவது ரகம்.

மூன்றாவது ரகம் எப்படித் [illegible]

வெளியே போட்டு விட்டு 'கம்' என்று இருப்பார். வேறு ஒருவர் வந்து, "சார் இடம் காலியா உட்காரலாமா?" என்பார். உட்காருங்களேன் என்பார் இவர். அதன் பின்னர் துண்டுபோட்டவர் வருவார். இரண்டு பேருக்கும் சண்டை வந்துவிடும். நமது ஆள் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார். இவர் நாலாவது ரகம். இப்படியாக நாலுவகை ஜனங்கள்.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், முதல் ரகம் நமது நாட்டில் குறைவு தான். மூன்றாம், நான்காம் ரகங்களும் நாட்டில் குறைவு தான். இரண்டாவதுரகம் அதாவது நல்லவர்கள்... இருந்தாலும் அடுத்தவர்கள் சௌகரியத்துக்காகத் தன்னுடைய சௌகரியத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாதவர்கள்... அப்படிப் பட்டவர்கள் தான் சமுதாயத்தில் மிகவும் அதிகம். ஒரு சமுதாயத்தில் முதல்ரகமும் இரண்டாவது ரகமும் எவ்வளவுக்கு அதிகமாகஇருக்கிறதோ அவ்வளவுக்கு அந்த சமுதாயம் நல்ல விதமாக இருக்கும்; நமது நாடு சுதந்திரம் அடைந்த சமயத்தில் முதல்ரகமும் இரண்டாவது ரகமும் அதிகமாக இருந்திருக்கிறது. இப்போதெல்லாம் நான்காவது ரகம் அதிகமாகி இருப்பது போல் தெரிகிறது.

இந்த நிலைமை மாறவேண்டும் என்றால் முதல் ரகமான மனிதர்களை நம்பிரதிநிதிகளாக நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் சரி... முதல் ரகமா; மூன்றாவது ரகமாஎன்று எப்படிக்கண்டு பிடிப்பது? அவர்களுக்குஎன்ன முகத்திலேயேஅப்படிஎழுதியா ஒட்டியிருக்கும்? நாம் தான் சாமர்த்தியமாக அதைக் கண்டுபிடிக்க வேண்டும். வோட்டுக் கேட்கிற முறையை வைத்துக்கூட அவர்கள் எந்த ரகம் என்பதை ஓரளவுக்குக் கண்டுபிடிக்கலாம்.

ஒருவர் அப்படித்தான் வோட்டுக்கேட்டு வந்தார். அவர் வோட்டுக்கேட்கிற முறையே தனி அவர் ஒவ்வொரு வீடாகப் போவார். அந்தந்த வீட்டில் இருக்கிறவர் என்ன வேலை செய்கிறாரோ அதே வேலையை இவரும் செய்வார் அப்படிச்செய்து கொண்டே வோட்டுக்கேட்பார். அதே மாதிரி ஒரு வீட்டுக்கு

# இடத்தை விட்டு அகலுமாறு அழுத்தம் முகாமில் தங்கியுள்ள குடும்பங்கள்

## ம. உ. ஆ. குழுவில் முறைப்பாடு

(தென்மராட்சி)

மல்லாகம் நீதிவான் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் கடந்த பல ஆண்டுகளாகத் தங்கியிருக்கும் 56 இடம்பெயர்ந்தோர் குடும்பங்களை வேறு இடத்துக்கு இடம் மாறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதை அங்குள்ள குடும்பங்கள் கடுமையாக ஆட்சேபித்து வருகின்றன.

இது தொடர்பாக அங்கிருக்கும் குடும்பங்களின் தலைவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த முகாம் அமைந்துள்ள காணி தனியார் ஒருவருக்குசொந்தமானதுஎனவும் அவர் தனது காணியை தமது தேவைக்காக விட்டுவிடும்படி கோரியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதே சமயம் மேற்படி 56 குடும்பங்களுக்குமான குடியிருப்பு கிணறுகள், மலசல கூடங்கள் யாவும் அங்கு அமைக்கபட்டுள்ளமையினால் தாம் அவற்றை விட்டுவிட்டுப் போவது பெரும் நடைமுறைக்கஷ்டங்களைத் தமக்கும் தம்முடன் தங்கியிருக்கும் அங்கத்தவர்களுக்கும் உருவாக்குவதுடன் வேறு புதிய இடங்களுக்கு தாம் அனுப்பப்படின் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படையும் எனவும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இது இவ்வாறிருக்கவலிகாமம் வடக்கில் இடம்பெயர்ந்த நிலையிலுள்ள மக்களை அவர்களதுசொந்தஇருப்பிடங்களில் மீளக் குடியமர அரசாங்கம் உடனடியாக அனுமதிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் தாம் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வலிகாமம் வடக்கு வெகுஜன அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் மல்லாகம் நீதிவான், முகாம் மக்கள் எதிர்நோக்குகின்ற இருப்பிடப் பிரச்சினை தொடர்பாக யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் தற்போது தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றனர். (உ-77,6)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று என். செல்வச் சந்திரனின் இசை நெறியாழ்கையில் 'சாஸ்திரீய மெல்லிசை' இடம்பெறவுள்ளது. (உ-3)

## தெய்வீக நிகழ்ச்சி

வடபிரதேச இந்துப் பேரவை நல்லூர் உற்சவ காலத்தையொட்டி 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தி வரும் தெய்வீக நிகழ்ச்சியில் இன்று சைவப் பெரியார்கள், தொண்டர்கள் கௌரவிப்பு நிகழ்வும் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் குழுவினரின் 'ஸ்ரீ வள்ளி திருமணம்' வில்லிசையும் இடம்பெறவுள்ளது. (உ-3)

## இசைப் பேருரை

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீமுத்து விநாயகர்ஆலயமண்டபத்தில் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் மகாபாரத இசைப் பேருரை இன்று 'கர்ணன்' என்னும் தலைப்பில் இடம்

## சமாதான விபரங்கள் தனியான இணையதளத்தில்

(கொழும்பு)

சமாதான முயற்சிகள், மற்றும் அதன் அண்மைக்கால மாற்றங்கள், சமாதானத்தின் வரலாறு என்பவற்றை உள்ளடக்கிய இணையத்தளம் ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் இணையத்தளத்தினை சமாதான செயலகம் கையாளும்.

இதன் மூலம்மக்களும் தமது சமாதானம் தொடர்பிலான கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடியதாக இருப்பது இதன் சிறப்பம்சமாகும். (உ-7)

## ரகளை புரிந்த நபர் எச்சரிக்கப்பட்டார்

(சுதுமலை)

கடந்தவார இறுதியில் இடம்பெற்ற நவாலி வடக்கு சமுர்த்தி அபிவிருத்திக் கூட்டத்தில் ரகளை புரிந்த நபரை மானிப்பாய் பொலிஸார் கைதுசெய்து கடும் எச்சரிக்கை செய்தபின் விடுதலை செய்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி நபருக்கு ஆதரவாக எழுதப்பட்ட கடிதம் ஒன்று வலி-தென்மேற்கு பிரதேச செயலருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் இது தொடர்பாக பிரதேச செயலர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவத்தில் சம்பந்தப்பட்ட நபர் தலைமறைவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-252)

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்

## செயற்திட்ட அதிகாரியாக ரவீந்திரன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுஅலுவலகத்தின், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் மனித உரிமை செயற்றிட்ட அதிகாரியாக

நாட்டில் அகதிகள் பெருமளவில் காணப்பட அதி உயர் பாதுகாப்பு வலயங்களும், படை முகாம்களுமே காரணம் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஆசனத்தில் இந்த [illegible] வதுரக ஆள் உட்கார்ந்திருக்கிறார். இன்னொருவர் ஆசனம் கிடைக்காமல் நின்றுகொண்டே பிரயாணம் செய்கிறார். நமது ஆள் நிற்கிறவருக்காகப் பரிதாபப்படுவாரே தவிர எழுந்து அவரை உட்கார வைத்துவிட்டு தான் நின்று கொண்டு வர மாட்டார். அந்த அளவுக்குத் தான் தியாகி இல்லை யென்றும் சொல்லிவிடுவார். இவர்கள் இரண்டாவது ரகம்.

மூன்றாவது ரகம் எப்படித் தெரியுமா? சொந்த செளகரியத்துக்காக அடுத்தவர் செளகரியத்தைக் கெடுக்கவும் துணிந்து விடுவார்கள். ஏற்கெனவே, பஸ்ஸில் ஆசனத்தில் வேறு ஒருவர் துண்டு போட்டு வைத்திருந்தாலும், அதைத் தூக்கி யாருக்கும் தெரியாமல் ஜன்னல் வழியாக வெளியே போட்டு விட்டுஅந்த இடத்தில் நல்ல பிள்ளை மாதிரி இவர் உட்கார்ந்திருப்பார். துண்டுபோட்டவர் வந்து கேட்டால் ''துண்டா? நான்பார்க்கவில்லையே'' என்பார். இது மூன்றாவது ரகம்.

நாலாவது ரகம் தனக்கு எந்தச் செளகரியமும் இல்லையென்றால் கூட அடுத்தவர்களுக்கு ஏதாவது கெடுதல் பண்ணிக் கொண்டேயிருப்பார்கள். அதிலே ஒரு சுவாரஸ்யம், இவர் பஸ்ஸில் உட்கார்ந்திருப்பார். இவருக்குப் பக்கத்தில் ஒருவர் துண்டு போட்டுப் போயிருப்பார். இவர் அந்தத் துண்டை எடுத்துச் சத்தம் போடாமல் வோட்டுக் கேட்கிற முறையை வைத்துக்கூட அவர்கள் எந்த ரகம் என்பதை ஓரளவுக்குக் கண்டுபிடிக்கலாம்.

ஒருவர் அப்படித்தான் வோட்டுக்கேட்டு வந்தார். அவர் வோட்டுக்கேட்கிற முறையே தனி அவர் ஒவ்வொரு வீடாகப் போவார். அந்தந்த வீட்டில் இருக்கிறவர் என்ன வேலை செய்கிறாரோ அதே வேலையை இவரும் செய்வார் அப்படிச்செய்து கொண்டே வோட்டுக்கேட்பார். அதே மாதிரி ஒரு வீட்டுக்கு போனார். இவர்போன நேரத்தில் அந்த வீட்டுத் தோட்டத்தில் அவர் கொத்திக் கொண்டிருந்தார். இவர் உடனே ஓடிப்போய் தானும் இன்னொரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டு அவருக்குப் பக்கத்திலேயே கொத்த ஆரம்பித்தார். நெற்றிவேர்வை நிலத்தில்விழ கொஞ்சநேரம் கொத்தினார். அதன்பின் மெதுவாகப்பேச ஆரம்பித்தார்.

இதுமாதிரி... நான் தேர்தலில் நிற்கிறேன். உங்கள் வோட்டை எனக்குப்போட வேண்டும் என்றார். அது முடியாதகாரியம் என்றார் அவர். 'ஏன்என்று கேட்டார் இவர்' ஏனென்றால்...நான் இந்த வீட்டுக்காரன்இல்லை... நானும் உங்களைப்போல் வோட்டுக்கேட்க வந்தவன் தான்.. அதுதான் கொத்திக் கொண்டிருக்கிறேன் என்றார் அவர்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தெய்வீகப் பேருரை

நல்லூர்சைவ மகாசபையின் ஏற்பாட்டில் நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் ஸ்ரீமனோன்மணி அம்பாள்ஆலயத்தில்இன்று நீரா? நெய்யா? (நமிநந்தி அடிகள்) என்னும் தலைப்பில்காரை கு. சிவராஜ சர்மா சொற்பொழிவாற்றவுள்ளார்.

ளது. (உ-3)

## இசைப் பேருரை

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீமுத்து விநாயகர்ஆலயமண்டபத்தில் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்திவரும் மகாபாரத இசைப் பேருரை இன்று 'கர்ணன்' என்னும் தலைப்பில் இடம் பெறவுள்ளன.

## சிறப்புக் கலையரங்கம்

புலிகளின் குரல் நிறுவனத்தினால் தியாகிதிலீபன், கேணல் கிட்டுஆகியோரின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் சிறப்புக் கலையரங்கத்தில் இன்று இரவு 6.30 மணிமுதல்மனோகரி சிவராமின் கதாபிரசங்கமும், போராளி இசையமைப்பாளர்களான இசைப்பிரியன், செயல் வீரன் ஆகியோரின் இசைவிருந்தும்இடம்பெறவுள்ளன. (உ-3)

## பக்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேர் உற்சவத்தில் கலந்து கொண்ட பக்தர் ஒருவர், சன நெரிசல்காரணமாக வீதித்தடையில் போடப்பட்டிருந்த இரும்புச் சட்டம் வீழ்ந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன் தினம் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் நல்லூரடியைச்சேர்ந்தசெ.கிரிதரன் (வயது 18) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார். (உ-6)

பட்ட கடிதம் ஒன்று வலி- தக்கது. (த-252)

## உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் செயற்திட்ட அதிகாரியாக ரவீந்திரன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுஅலுவலகத்தின், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் மனித உரிமை செயற்றிட்ட அதிகாரியாக எஸ். ரவீந்திரன் அண்மையில் பதவியேற்றுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளை உரியவாறு பேணுவது தொடர்பிலான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளதாக எஸ். ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், யாழ். குடாநாட்டில் அகதிகள் பெருமளவில் காணப்பட அதி உயர் பாதுகாப்பு வலயங்களும், படை முகாம்களுமே காரணம் என்றும் சுட்டிக்காட்டினார்.

தவிர, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்களை அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார். (உ-6)

## புலிகள் மேலும் பலமடைய தடைநீக்கம் வழிவகுக்கும் ஜே. வி. பி. கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டமையால் அவர்கள் மேலும் பலமடையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

உள்நாட்டில் தடை நீக்கப்பட்டதைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு வழிகோலப்பட்டுள்ளது.

அதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவர்களால் சட்டவிரோதமாக நடத்தப்பட்டு வரும் நீதிமன்றங்கள், வங்கிகள் மற்றும் தமிழீழ காவல்துறை என்பன இதன்மூலம் சட்ட ரீதியானவை யாக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க மிக மோசமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக விடுதலை செய்யப்படவுள்ள நிலையில் சாதாரண குற்றங்களின் கீழ் சிறைச்சாலைகளில் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது என்றும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. (த)

# கலாசார விழுமியங்களைக் காக்க மலர்ந்த சஞ்சிகை பூரணி சிரஞ்சீவியாக வாழ வேண்டும்




தமிழ் இதழ்த் துறையில் புத்தம் புதிய ஏடாகப் பூரணி இலக்கியச் சஞ்சிகையின் முதலாவது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. புதிதாக மலர்ந்த ரோசாப்பூவை அட்டைப் படமாகக்கொண்டு பூரணி மலர்ந்துள்ளது. தமிழ் அறிஞராகவும் ஆர்வலராகவும் உள்ள நயினை கி. கிருபானந்தா இதன் பிரதம ஆசிரியராக உள்ளார்.

## வாழ்த்துரைகள்

முதல் இதழ் என்ற வகையில் அருட்கவி சி.விநாசித்தம்பி, மகாவித்துவான் பிரம்மஸ்ரீ . ச. வீரமணி ஐயர், கலாநிதி க. சொக்கலிங்கம் ஆகியோரின் வாழ்த்துக் கவிதைகளும் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன், பேராசான் க. சிவராமலிங்கம் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

பூரணியின் முதல் இதழில் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை, நேர்காணல் ஆகிய ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

## கட்டுரைகள்

யாழ்.பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடப்பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் கலாநிதி எஸ். ஜெபநேசன் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், கலாநிதி எஸ். சிவலிங்கராசா, கலாநிதி. காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு. செல்லப்பா நடராசா, யாழ். பல்கலைக்கழக அரசறிவியல், சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன், கோ. சி. வேலாயுதம் ஆகியோரின் தரமான கட்டுரைகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் ''மறைந்து போன நாகரிகம்'' என்ற தலைப்பில் மொகஞ்சதாரோ, ஃபரப்பா ஆகிய நகரங்களின் வரலாற்றுச் சிறப்பை ஆராய்ந்துள்ளார். திராவிட மக்களின் தொன்மைப் பிரதேசங்களாக விளங்கிய இப் பகுதிகளில் வாழ்ந்த போர் நாட்டமற்ற மக்கள் வடக்கேயிருந்து வந்த ஆரியர்களால் தாக்கித் துரத்தப்பட்டுத் தென்னிந்தியப் பிரதேசங்களுக்கு வந்து சேர்ந்ததாக அவர் விளக்கியுள்ளார்.

## தமிழ் இனிமை

மேனாட்டாரைக் கவர்ந்த ''தமிழின் இனிமை'' என்ற தலைப்பிலே தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்த மேற்கு நாட்டவரின் தமிழ்ப்பற்றையும் சிறந்த

## - திறனாய்வுக் களம் -

தமிழ்ப்பணிகளையும் பேராயர் எஸ். ஜெபநேசன் அவர்கள் ஆராய்ந்துள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் கூற்றிலே ஐரோப்பாவிலிருந்து வந்து, தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்த அறிஞர்களுக்குத் தமிழ் கற்பிக்கச் சென்னையிலும் வட்டுக்கோட்டையிலும் தொடங்கப் பெற்ற கல்லூரிகளின் சிறப்பை அவர் கூறியுள்ளார். இங்கு காலத்துக்குக் காலம் வந்து தமிழ்ப்பணி ஆற்றிய பேராயர் றொபேர்ட் கால்டுவெல், பீற்றர் பேர்சிவல், மைரன் வின்சிலோ ஜீ. யூ. போப் முதலிய பேரறிஞர்களின் வரலாற்றைப் பேராயர் ஜெபநேசன் இக் கட்டுரையில் சிறப்பாக ஆராய்ந்துள்ளார்.

கலாநிதி எஸ். சிவலிங்கராசா ''யாழ்ப்பாணத்துக் கல்வி மரபில் இராமாயணம்'' என்ற தலைப்பில் ஈழத்துக்கும் தமிழகத்திற்குமிருந்த கல்வித் தொடர்பு யாழ்ப்பாணத்தில் நிலவிய தமிழ், வடமொழிக் கல்வி என்பன பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

### புலம்பெயர்வும் விடைபெறும் கலாசார விழுமியங்களும்

''புலம்பெயர் காரணிகளும் புலம்பெயர்ந்தோர் எதிர் நோக்கும் சவால்களும்'' என்ற தலைப்பில் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை. ஈழத்தமிழர் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தமையும் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் எடுத்துக் காட்டுகிறார்.

கலாநிதி என்.சண்முகலிங்கன் வீடியோவின் சிறப்பையும் அதனை நாம் பயன்படுத்தக் கூடிய வழி முறைகளையும் ஆராய்ந்து குறிப்பிடுகிறார்.

''விடைபெறும் கலாசார விழுமியங்கள்'' என்ற தலைப்பில் கோ. சி. வேலாயுதம் தமிழரின் மரபு முறையான பண்பாடுகளையும் மேனாட்டுப் பண்பாடுகளின் கலப்பினால் அவை நலிவடையும் முறைகளையும் ஆராய்ந்து கூறி, அவற்றைப் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

அராலியூர். ந. சுந்தரம்பிள்ளை எழுதிய சிறுகதை அதிபர் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களையும் துன்பங்களையும் விளக்குகின்றது.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவி சிவத் தமிழ்ச் செல்வி. கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டியுடனான நேர்காணலும் இடம் பெற்றுள்ளது.

பூரணி அனைவரதும் அரவணைப்பில் சிரஞ்சீவியாக வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்'' என்கிறார் துணைவேந்தர் பேரா சிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை.

இன்று யாழ்ப்பாணத்தில் வாசகர்களுக்குரிய இதழ்களை, எழுத்தாளர்களை எழுதத்தூண்டும் இதழ்களோ இடையீடின்றி வெளி வருவதில்லை. பூரணி இந்தக் குறைபாட்டை நீக்கித் தொடர்ந்து வெளிவர வேண்டும்.

*மயிலங்கூடலூர்*
*பி. நடராசன்*

**இதழின் பெயர்: பூரணி**
**ஆசிரியர்: கி. கிபொனந்தா.**
**விலை: 100ரூபா.**

---

# வாந்திபேதியைக் கட்டுப்படுத்துவோம்

**வாந்திபேதி மிகவும் விரைவாகப் பரவி பாரிய உயிரிழப்பை ஏற்படுத்தும் கொடிய நோயாகும். இது வருவதைத் தடுக்க ஒவ்வொருவரும் நற்சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப் பிடித்தல் அவசியமாகும்.**

- நன்கு கொதிக்க வைத்த நீரையே அருந்தவும்.
- மலங்கழிப்பதற்கு மலகூடத்தையே பயன்படுத்தல் வேண்டும்.
- உணவு அருந்த முன்பும், மலங்கழித்த பிற்பாடும், கைகளை சவற்காரமிட்டு கழுவுதல் வேண்டும்.
- காய்கறி, கீரைவகைகளை நன்கு கழுவியும், வேக வைத்தும் உண்ணுதல் வேண்டும்.
- பழுதடையாத பழங்களை மட்டும் நன்கு கழுவி உண்ணுதல் வேண்டும்.
- உண்ணும் உணவுப் பொருட்களை சூடான நிலையிலேயே உண்ணல் வேண்டும்.
- கண்ட இடங்களிலும் நீர் உணவு அருந்துவதைத் தவிர்க்கவும்.
- உள்ளூர் உற்பத்தி குளிர்பானம் (சர்பத்), குளிர்கழி போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- உணவில் இலையான்கள் மொய்க்காது பார்த்துக் கொள்வதுடன், இலையான்கள் உற்பத்தியாகும் இடங்களைத்தேடிக் கண்டுபிடித்து அழித்து சுத்தப் படுத்தல் வேண்டும்.
- வாந்திபேதி நோயாளி உள்ள இடங்களுக்கும் செல்வதைத் தவிர்த்தல் அல்லது வருமுன் காப்பு சிகிச்சை பெறுதல் வேண்டும்.
- வாந்திபேதி சம்பந்தமான சந்தேக அறிகுறிகள் தென்படின் உடன் சுகாதாரப் பிரிவினருக்கு தெரியப் படுத்தவும்.
- வயிற்றோட்டம், வாந்தி உள்ள ஒருவரைத் தாமதிக்காது வைத்தியசாலைக்கு அனுப்புவதனால் அவரது உயிரைப் பாதுகாக்க முடியும்.

தமிழீழ சுகாதார சேவைகள்,
தமிழீழம்.

# 18ஆம் திகதி ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

கண்டி உடத்தலவின்ன 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று தெல்தெனிய மஜிஸ்ரேட் நீதவான் இனோக்கா றணசிங்க முன்னிலையில் நடைபெற்றது.

இக்கொலை வழக்கில் சந்தேக நபர்களான பிணையில் விடுவிக்கப்பட்ட ரத்வத்தையையும், அவரது இரு புதல்வர்களையும் எதிர்வரும் 18ஆம் திகதி மன்றில்ஆஜராகுமாறும் ஏனைய 8 பேரையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (உ-8)

# மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி விளையாட்டு அவை நடத்தும் 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 11பேர் பங்குபற்றும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாளை காலை 8.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை வி.க. எதிர் சுன்னாகம் மக்கள் வங்கி வி.க.

மு.ப. 10 மணிக்கு கட்டடத் திணைக்கள வி.க எதிர் மதுவரித் திணைக்களம் வி.க

பி.ப 1.30 மணிக்கு யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி வி.க எதிர் யாழ் பிரதேச செயலக வி.க. பி.ப 3 மணிக்கு தொழில் நுட்பப்பூங்கா வி.க யாழ் ப.நோ.கூ சங்கவி.க ஆகியன மோதவுள்ளன. (உ-3)

---

## பூங்காவன உற்சவம்



### பூங்கா வனத்தில் புரிந்தாய்!

பூங்கா வனத்தில் புளினர் பாவையைப்
பாங்கான பரிசு பக்குவத் திறகருள்வாய்
வாங்குவில் வடிவேற் கரத்து வள்ளலே
பூங்கா வனத்தில் புரிந்தாய் எமையும்

- சிவ. சண்முகவடிவேல் -

### என்னை ஆட்கொள்வதெப்போ?

அன்னையொப்பாய் எனக்கு அத்தனொப்பாய்
பரிபூரணமே
பொன்னையன்றி விரும்பாத புல்லர் தம் பால் சென்று
இரவாது
உன்னையே கதியென்று தினம் அடிமை செயும்
என்னை ஆட்கொள்வதெப்போதோ நல்லூரா.

- வை. சி. சிவசுப்பிரமணியம் -

### நல்லூரானே நலம் அருள்வாய்

வீரவேலேந்தி வீரம்தனை தெளித்து
ஞான வேலேந்தி தீய ஒளி அகற்றி
சக்தி வேலேந்தி சகல அருள் அளித்து
அன்பு வேலேந்தி அகிலம்தனை அடக்கி
பசிய வேலேந்தி பசுமைதனைக் கொடுத்து
அதிசய வேலேந்தி திசையெங்கும் வியாபித்து
அருள் வேலேந்தி மருள்தனை ஒழித்து
நல்லூரானே நலம் அருள்வாய்
நாம் உம் முன் உறைகின்றோம்.

- K.ராஜீ -

### அனைவரையும் சேர்த்து அமைதியினைத்தா

(சிந்துநடை)

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தி யேழில் - நீ
அழகு மிகு தென்புற வாசலைத்தி றந்தாய்
இரவு படும் முன்னே நாங்கள் முடங்கு மவ்வேளை - உன்தன்
தேரடியைச் சுற்றியல்லோ திருவீதி வந்தாய்
புத்தாயிரத் தாவணிப தின்னான்கில் நீயும் அங்கே
தங்கவேலாய் மாறியெம்மைத் தாங்கி யருள் செய்தாய்
சித்திர பானுவிலே சிங்கார வேலா - நீயும்
தென்புறத்தில் கொடித்தம்பம் கொண்டழகு கொண்டாய்
வேளைக்கொரு கோலங்கொண்டு விரைவாக வளரும் - எங்கள்
வேலவனே விரைவினிலே நிம்மதியைத் தா. தா
ஆளுக்கொரு கோலங்கொண்டு அடிபடுமிவ் வேளை - அவர்
அனைவரையும் சேர்த்தெமக்கு அமைதியினைத் தா. தா

- கவிமணி அன்னைதாஸன் -

### வல்லமை தந்தருள்வாய்

மயிலதில் ஏறி மகிழ்வுடன் நாளும்
உலகினைக் காக்கும உமைபாலா
குறமகள் வள்ளி மனதினை அள்ளி
திறமுடன் அருளும் பெருவேலா
முத்தமிழ்ச் சுவையை விருப்புடன் ஆளும்
நல்லையம் பதியுறை பெருமானே
தொல்லைகள் இன்றி சுகமுடன் வாழ
வல்லமை தந்தெமக் கருள்வாயே

- எஸ்.துரைமகள் -

### அரவணைத்து அருள்கொடுப்பாய்

பல்லவி

சேவற் கொடியுடைய சேந்தனே - நல்லூர்
செந்தமிழ் மண்மீது வந்தருள் புரிகின்ற (சேவற்)

அனுபல்லவி

ஆவல் மீதூறநின்றுன் றடியினை தொழுமன்பர்
பாவ வினையறுக்கும் பரஞ்சோதி வடிவினனே (சேவற்)

சரணங்கள்

நெஞ்சினில் நெருப்பேந்தி நீண்ட துயருழன்று
தஞ்சமென் றுன்காலில் வந்துவிழும் தமிழினத்தை அஞ்சலென்
றேநீயும் அரவணைத் தருள் கொடுப்பாய்
வெஞ்சமரில் சூரனையே வெற்றி கொண்ட வடிவேலா (சேவற்)

குஞ்சரர்க் கிளையோனே குறவள்ளி துணையோனே
நஞ்சுண்ட நாதனது நடுக்கண்ணில் உதித்தோனே
பஞ்சைகளாய்ப் பதைபதைக்கும் பாரிலுள்ள தமிழினத்தை
வஞ்சகத்தால் அழித்திடாது வண்ணமுற வாழவைப்பாய் (சேவற்)

- செ.திருநாவுக்கரசு, நல்லூர். -

### நின்னைச் சரணடைதல்

இதுவரை சரியே செய்தாய்
இனியும் நீ சரியாய்ச் செய்வாய்
எதுவரை நடப்ப தென்று
எழுதிநீ நடத்திச்செல்வாய்
விதியெனச் சிரிப்பாய் நல்லூர்
வேலவா... நித்தம் உன்னால்
புதுஅருள் பெற்றோம் வேறு
பேறெதும் வாழ்விற் தேடோம்!

- த. ஜெயசீலன் -

### பக்தியால் துதிக்கின்றோம்

தித்திக்கும் அன்பருள்ளத் தாறுமுகனே
எத்திக்கும் வணங்கிடவே பூங்காவனத்தில்
பித்தனின் மகனாக வருபவனே
பக்தியால் துதிக்கின்றோம் உம்மடியை

- வேலணை பாலா

# அமெரிக்காவின் செயலுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை

## முஷாரப் முன் கூட்டியே தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனை பதவி கவிழ்ப்பதற்காக அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள தாக்குதலில் பங்குகொள்ளப் போவதில்லையென பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அறிவித்துள்ளார்.

உள்நாட்டு விடயங்கள், பிராந்திய அலுவல்கள் தொடர்பாக தாம் ஈடுபட்டு வருவதாகவும் வெளிநாட்டு விடயங்களில் தலையீடுசெய்யும்நோக்கம் தமக்குஇல்லை என்றும் முஷாரப் தெரிவித்துள்ளார்.

ஈராக் தாக்கப்பட்டால் அது உலகஅரங்கில் முஸ்லிங்கள் மத்தியில் எதிர்ப்பை ஏற்படுத்தும்எனவும், இதனை ஐரோப்பியசமூகம், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளும் ஆதரிக்கமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தலிபான் அரசைப் பதவிகவிழ்க்க முஷாரப் அமெரிக்காவுடன் ஒத்துழைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-3)

# ஜம்மு சட்டமன்றத் தேர்தலை ஆதரித்து ஆமிரேஜ் கருத்து

(வாஷிங்டன்)

ஜம்முகாஷ்மீரில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தல் காஷ்மீர்மக்களின் விருப்பத்தின் வெளிப்பாடாகவும், அமையும்எனவும் அது காஷ்மீர் பிரச்சினையைதீர்க்க உதவுமெனவும் அமெரிக்கப் பிரதி இராஜாங்கஅமைச்சர் டிச்சட்ஆமிரேஜ் தெரிவித்துள்ளார்.

'ஜம்முகாஷ்மீரில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தல் ஓர் வீண்வேலை என பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்த கருத்துக்கு பதிலடியாகவே ஆமிரேஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜம்முகாஷ்மீர் மக்களின் துன்பத்தை நீக்கும்வகையில் அம்மாநிலத்தின் தேர்தல் அமைதியாக நடத்தப்படுவதையே சர்வதேசஉலகம் விரும்புகிறது எனவும்,

இத்தேர்தலுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுமதிக்கப்போவதில்லை என இந்தியா தெரிவித்துள்ளபோதிலும், சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுமதிப்பதற்கு புதுடில்லி தயாராகவுள்ளதாக கர்நாடக அதிகாரிகள் தெரிவித்திருப்பதாகவும் ஆமிரேஜ் தெரிவித்துள்ளார். (உ-8)

# ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு பக்தாத் புதிய நிபந்தனை விதிப்பு

(மொஸ்கோ)

ஈராக்கை பாதிக்கச்செய்திருக்கும் பொருளாதாரத் தடை நீக்கப்படும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் ஆயுதக் கண்காணிப்பாளர்களை அனுமதிக்கலாமென பக்தாத் புதிய நிபந்தனை விதித்துள்ளது.

மொஸ்கோவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஈராக் வெளியுறவு அமைச்சர் நஜிஸப்ரி இந்நிபந்தனையை அறிவித்துள்ளார்.

ஈராக் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் குறையவேண்டும், ஈராக்கின் இறைமை மதிக்கப்படவேண்டும் இதன்பின்னரே ஆயுதக் கண்காணிப்பாளர்களை ஈராக்கினுள் அனுமதிப்பது குறித்து முடிவெடுக்கலாம்என மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆயுதக் கண்காணிப்பாளர்களை அனுமதிப்பது தொடர்பான ஈராக்கின் ஆலோசனையை வாஷிங்டன் நிராகரித்துள்ளது.

இதேவேளை, ஈராக்மீது தாக்குதல் நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியை வாஷிங்டன் கோரும் பட்சத்தில் அதனை வீட்டோ அதிகாரத்தை பாவித்து ரத்து செய்யப்போவதாக மொஸ்கோ எச்சரித்துள்ள. (உ-3து)

# கொல்கொத்தா மருத்துவமனையில் 15 குழந்தைகள் இறப்பு

(புதுடில்லி)

மேற்கு வங்காளத்தில் கொல்கொத்தா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 15 குழந்தைகள் கடந்த சில தினங்களில் இறந்துள்ளன.

இவ் இறப்புக்கு மருத்துவ வசதிகள் குறைவே காரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ள போதிலும், இது வெறும் சாட்டுக் காரணம் என எதிர்க்கட்சிகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை இது தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு மேற்கு வங்காள அரசு வைத்தியசாலை இயக்குநருக்குப் பணித்துள்ளது. (உ-7)

# மலையேறிய மாணவர்கள் பனிப்பாறை மோதி மரணம்

(புவனஸ் அயர்ஸ்)

ஆர்ஜென்டினாவில் மலையேறும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கல்லூரி மாணவர்கள் மீது பனிப்பாறைகள் சரிந்து விழுந்ததில் 7 பேர் பலியாகினர்.

ஆர்ஜென்டினாவின், படகோனியா பிராந்தியத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேடுதலில் ஈடுபட்ட பாதுகாப்பு பிரிவினர் இதுவரை 7 சடலங்களை கண்டெடுத்துள்ளனர். இன்னும் இருவரைக் காணவில்லை எனவும் அறிவித்துள்ளனர். (உ-3)

# காவிரிநீர் தமிழகத்திற்கு திறந்து விடப்பட்டது

(புதுடில்லி)

கர்நாடகாவின் காவிரி ஆற்றில்இருந்து நாளாந்தம் 125 கோடி கனஅடி நீரை தமிழ்நாட்டுக்கு திறந்து விடுமாறு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதற்கமைய கடந்தபுதன் கிழமை முதல் கர்நாடகத்தில் இருந்து தமிழ் நாட்டுக்கு நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

கர்நாடகம், தமிழகம் ஆகிய மாநிலங்களுக்கு சவாலாக இருந்துவந்த காவிரி நீர்ப்பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை பல அரசியல் கட்சிகளும் வரவேற்றுள்ளன.

சந்தனக்கடத்தல் வீரப்பன், முன்னாள் விவசாயத் துறைஅமைச்சர் நாகப்பாவை கடத்திச்சென்றுள்ளமை தொடர்பாக வெளியிட்டுள்ள ஒலிநாடாவில் காவிரிநீரை திறந்துவிடுமாறு கோரிக்கை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

திறந்துவிடப்பட்ட இந்நீர் மூலம் தமிழ்நாட்டு விவசாயிகள் பெருமளவு நன்மைஅடைவதுடன், அங்கு உற்பத்தியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-7,8)

# கலாம் போபால் பயணம்

(புதுடில்லி)

இந்திய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் நேற்றுமுன்தினம் மத்திய பிரதேசத்தில் உள்ள போபால் நகருக்கு இரண்டாவது தடவையாகவும் பயணம் செய்தார்.

18 வருடங்களுக்கு முன்னர் அங்கு ஏற்பட்டபாரிய விஷவாயுகசிவினால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனைக்கு சென்று அங்கு நோயாளர்களுடன் உரையாடி உள்ளார். (உ-7)

# அகதி முகாமில் மோதல் இருவர் பலி;பலர் படுகாயம்

(பேரூட்)

லெபனானில் உள்ள அகதி முகாம்ஒன்றில் இடம்பெற்ற மோதலில் 2 பேர் பலியானதுடன் 14 பேர் படுகாயம் அடைந்துள்ளார்கள்.

லெபனான் இராணுவத்தினால் அகதி முகாம் சோதனை இடப்பட்ட பொழுது அங்கிருந்த பலஸ்தீன போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே இம்மோதல் ஏற்பட்டுள்ளது. (உ-7)

# அமெ. மீது தாக்குதல் நடத்த அந்நாடே காரணம்

## ஐரோப்பிய மக்கள் கருத்து

(லண்டன்)

கடந்தவருடம் செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்கா தாக்கப்படுவதற்கு அமெரிக்காவும் ஒரு காரணமாகும் என ஐரோப்பிய கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் காணப்படும் நியாயமற்ற தன்மைகளே இதற்குமுக்கிய காரணம் என 55 வீத ஐரோப்பியர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தாக்கப்பட்டதன் பின் அமெரிக்கா தனது கொள்கைகளை வெளிநாடுகளில் அமுல்படுத்துவதிலும் பார்க்கதனது நாட்டை காப்பாற்றும் விடயத்திலேயே மும்முரமாகச் செயல்பட்டு வருகின்றதுஎன ஐரோப்பியர் மேலும்கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-3)

# இந்தியப் பிரதமர் அமெரிக்காவுக்கு ஆறு நாள் விஜயம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அமெரிக்காவுக்கு 6 நாள் பயணம் ஒன்றினை மேற் கொள்ளவுள்ளார்.

எதிர் வரும் 10 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை புதுடில்லி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு 11ஆம் திகதிஅமெரிக்காவைச் சென்றடைவார்.

அன்றையதினம்அங்குநடைபெறவுள்ள, செப்டெம்பர்11 ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் முதலாம் ஆண்டுநினைவு நாளில்கலந்து கொள்வார்.

மறுதினம் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்ஷை சந்தித்து பேச்சுக்கள் நடத்துவார்.

வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஐ. நா பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்பார். (உ-7)

# பழ. நெடுமாறனுக்கு உடல் நலக் குறைவு

(புதுடில்லி)

போடோ தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடலூர் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் விசாரணைக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

பழ.நெடுமாறனுக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டதன் காரணமாகவே அவரால் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்க முடியவில்லை என அவர் தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இருந்த போதிலும் அவர் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (உ-8)

# விதிக்கப்பட்ட தடையை மீள்பரிசீலிக்க கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக செயற்பாடுகளுக்கு விதிக்கப்பட்ட தடையினை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் கடந்த மார்ச் மாதம்இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் விதிமுறைக்கு மாறாகச் செயற்பட்ட குற்றச்சாட்டின்பேரில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டு கழகத்தின் செயற்பாடுகளுக்கு 5 வருடத்தடையினை ஊர்காவற்றுறைபிரதேச விளையாட்டுப் பேரவை விதித்துள்ளமை தெரிந்ததே.

குறிப்பிட்ட தடைகாரணமாக விளையாட்டு வீரர்களின் திறமைமழுங்கடிக்கப்பகவதுடன், எதிர்காலத்திடு

( 2ம் பக்கம் பார்க்க)

# மூடிய வீதிகளைத் திறந்து மக்கள் வெளியே சென்றுவர அனுமதி

## 6 குடும்பங்கள் உட்செல்ல அச்சம்

(மந்திகை)

பருத்தித்துறை524 வதுபடையணி இராணுவ முகாமினுள் அடங்கியுள்ள குடியிருப்புக்களுக்கான இரு பிரதான வீதிகளும் கடந்த புதனன்று திறக்கப்பட்டதையடுத்து, அதற்குள் அகப்பட்டிருந்த மக்கள் வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் பல குடும்பங்கள் தமதுஉடைமைகளுடன் வெளியேறின.

கடந்த திங்களன்று முகாம் பகுதியில் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட மறியல் போராட்டத்தை அடுத்து முகாமினுள் நுழையும் 5 பிரதான வீதிகளும் மூடப்பட்டு. நுழைவோர் சுடப்படுவர் என்ற வாசகமும் வாயில்களில் வைக்கப்பட்டன.

இதனால் சுமார் 40 குடும்பங்கள் வெளியேற முடியாது அப்பகுதிக்குள் முடங்கியிருந்தமை தெரிந்ததே.

புதனன்று காலை 8மணியளவில் முதலாம் குறுக்குத் தெருவீதி, கடற்கரை வெளிச்சவீட்டு வீதி என்பன திறக்கப்பட்டு மக்கள்வெளியே சென்றுவர அனுமதிக்கப்பட்டனர்.

இருப்பினும் புதியவர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இது இவ்வாறிருக்க, அங்கிருந்து வெளியேறிய 6 குடும்பங்களும் உள்ளே செல்ல அச்சம் தெரிவித்து தற்காலிக முகாம் அமைத்து அதில் தங்கியுள்ளனர். (உ-23)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சித்தியம்பதி அண்ணமார் தேவஸ்தான நூதன முருகன் ஆலய கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது. (உ- 75)

வினைக்குரிமை நாடிய
பின்றை அவனை
அதற்குரியனாகச் செயல்

குறள்

# வலம்புரி

## தாமதம் ஆகாது

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புலிகள் மீதான தடை நீக்கப்பட்டமை, சமாதான முயற்சியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

புலிகள் மீதானதடை நீக்கம் தென்னிலங்கையில் பேரினவாதிகளைச் சீற்றம்கொள்ள வைத்தாலும் சிங்கள மக்கள் சமாதானத்தையே விரும்புவதால் பேரினவாதிகளின் விருப்புகள் அங்கு செல்லுபடியற்றதாகிவிட்டது. இதனால் அவர்கள் ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதுடன் தமது எதிர்ப்பையடக்கிக் கொள்கின்றனர். இதேவேளை பேரினவாதிகளின் சமாதான விரோதச் செயற்பாடுகளுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த சில ஊடகங்கள் துணைபோவதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய தொன்றாகும். இருபது வருடகால யுத்தம் ஆயிரக்கணக்கான உயிர்களைக்காவு கொண்ட போதிலும், இன்னமும் யுத்தத்தை விரும்புபவர்கள்இருக்கின்றார்களெனில், அவர்கள் யுத்தத்தால் உழைப்புக் கண்டவர்கள் என்பதே உண்மை. தமது சுயலாபத்திற்காகவே அவர்கள் யுத்தத்தை விரும்புகிறார்கள் எனினும், தென்னிலங்கை சிங்கள மக்கள் எப்படியும் சமாதானத்தையெட்டிவிட வேண்டுமென்ற கொள்கையில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர்.

இத்தகைய நிலையில் அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள், சமாதானப் பேச்சு வெற்றியளிக்க வேண்டுமெனப் பிரதமருக்கு ஆசிவழங்கியுள்ளனர். இது விடயத்தில் பிரதமர் ரணில் மிகவும் தந்திரோபாயமாக பௌத்த பீடாதிபதிகளை வெற்றிகண்டுள்ளார்.

அதாவது, சமாதானப் பேச்சுக்கு வெறுமனே ஆதரவு தாருங்கள் எனக் கேட்டால், அதற்குப் பௌத்த பீடாதிபதிகள் ஏதோ குறையளக்கவே செய்வர்.

எனவே ஆசிஎனக்கேட்கும்போது அவர்கள் மறுக்கப்போவதில்லை. இதனைப் பிரதமர் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

அவர்களின் ஆசி நன்மையளிக்காவிட்டாலும் சமாதானப் பேச்சைக் குழப்பாமல் இருந்தால் அதுவே போதுமென்ற நிலையில் இரண்டாம்கட்டப்பேச்சுக்களிலும் அரசு தாமதம்காட்டாது துரிதப்படுத்தவேண்டும்.

# ஆத்மஜோதி ஐயாவின் வழிகாட்டலில் உருவான நயினை- நல்லூர்ப் பஜனைப் பாதயாத்திரை

நயினை
**நா. கோபாலகிருஷ்ணன்**
தலைவர்
சப்ததீவக திவ்ய ஜீவனசங்கம்

சற்குரு சுவாமி சிவானந்தரின் ஆத்மீகபோதனைகளின் உள்ளடக்கமே திவ்ய ஜீவன சங்கம், தெய்வீக வாழ்க்கை என்றால் என்ன என்பதை அனைத்துலகமக்களிற்கும்அதி உயர்ந்த போதனைகள் மூலம் உணர்த்த சற்குருசுவாமிசிவானந்தரால் ஸ்தாபிக்கப்பட்டதே திவ்ய ஜீவன சங்கம். இச்சங்கத்தின் மறுவடிவமே ஆத்மஜோதி நா. முத்தையா என்றால் அது மிகையாகாது. மனித உருவில் நடமாடிய திவ்ய ஜீவன சங்கம் ஆத்மஜோதி. ஆத்மஜோதி என்ற மாதாந்த வெளிநாட்டின் மூலம் இலங்கை, இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும் ஞானிகளின் ஆத்மீகக் கருத்துக்களை வெளிப்படுத்தியவர் ஆசிரியர் முத்தையா, மலரையும், மணத்தையும்எப்படிப் பிரித்தறியமுடியாதோ, அதேபோலமுத்தையாவையும் ஆத்மஜோதியையும் பிரித்துப் பார்க்க முடியாதவாறு ஆத்மஜோதி முத்தையாவானார்.

### பஜனை- பாதயாத்திரை

ஏழாலையில் பிறந்து நாவலப்பிட்டி குன்றின் உச்சியில் நின்று ஞான ஊற்றாக உற்றெடுத்த அருள் ஊற்றில் நனைந்தவர்கள் அதில் அள்ளுண்டவர்கள் ஆயிரம் ஆயிரம். கொழும்புதிவ்யஜீவனசங்கத்தின் செயலாளராக அன்று பணியாற்றிய அமரர் ம. நமசிவாயத்தையும் அச்சங்கத்தில் அங்கத்துவச் செயலாளராக அன்று பணியாற்றிய அடியேனையும்அணுகிய ஆத்மஜோதி முத்தையா, நல்லூர் கந்தன் தேரிற்கு நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இருந்து நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு பஜனைப் பாதயாத்திரையை நடத்துங்கள் என்று ஆலோசனை கூறியதுடன், 1964 ஆம் ஆண்டு உற்சவத்தின் போதுதானேமுன்னின்று ஆரம்பித்து வைத்தார். ஆத்மஜோதியின் சிறப்பாசிரியராக இருந்த ஈழத்து இல்லறஞானி நயினை க. இராமச்சநதிராவின் அருள் ஆசியும் அன்று எமக்கு உந்துசக்தியாகஅமைந்தது.

### நல்லூரான் தஞ்சம்

நல்லைப் பகுதிக்கு நேராய் நடந்து போவோம். நாமெல்லாம் வாரீர் சீராய் என்று சிவயோக சுவாமிகளின் ஞான வார்த்தைகள் பாதயாத்திரைக்கு அருள் சேர்த்தன குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார் சிவயோகிகளே என்றவாறு, யோகர் சொன்ன வார்த்தைகள் முழுதும் உண்மையான வார்த்தையாக நிதர்சனமான நிகழ்வாகஉணர்த்தி நின்றது, யாழ்ப்பாணத்தின் அண்மைய வரலாறு பஞ்சம்படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடிகிளியே, ஆறுமுகன் தஞ்சமடி என்று குருநாதன் சொன்னவாறு இந்தியப்படையின் அட்டூழியத்தின் போதும் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் போதும் நல்லூரான் திருவடியில் தஞ்சமடைந்ததைநாம் மறக்கத்தான் முடியுமா? அங்கே குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத் ?தெளிந்தறிய வேண்டாமா நல்லூரைக் கும்பிட்டு நீபாடு அதனாலே நாட்டில் உள்ள பிணிகள் ஓடும்'' என்ற நற்சிந்தனையின் வெளிப்பாடு தான் பஜனை பாதயாத்திரையின் வெளிப்பாடு.

### கடல் வழியாத்திரை

கோட்டை இராணுவநடவடிக்கையின் போது அராலிக் கடல் வழியாக எமது பாதயாத்திரை வேலுடன் வந்து கொண்டிருக்கும்போது வான் தாக்குதலை நடத்திக் கொண்டுஅராலிக் கடலை வட்டமிட்டஉலங்குவானூர்தி தாக்குதலை நிறுத்தி வட்டமிட்டுச் சென்ற நிகழ்வு ''நாளென்செய்யும் வினைதான் என்செய்யும் எனை நாடிவந்த கோள்என்செய்யும் கொடுங் கூற்று என்செய்யும் குமரேசர் இரு தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும் தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே என்ற கந்தர் அலங்காரத்தின் உட்பொருளை அன்று எமக்கு உணர்த்தியது.

நாயன் மார்கள் நால்வரும் பாதயாத்திரையாகவே திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டு தேவாரப் பதிகங்களைப் பாடி நமக்குத் திருமுறைத் தமிழகத்தந்து சென்றுள்ளார்கள். எனவே ஆத்மஜோதி காட்டிச் சென்ற திருத்தல யாத்திரை தான் நயினை நல்லைக் கந்தன் பஜனைப் பாதயாத்திரைஅதுதான் நால்வர் காட்டிய ஆத்மீக நெறி.

## சமூக உயிர்ப்பூட்டல்

(ஊர்காவற்றுறை)

தீவகப் பகுதிகளில் சமூக உயிர்ப்பூட்டல் குழுக்களின் நடவடிக்கைகள் முழு அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (உ-75)

## துறைமுகப் பணி இடம்பெறுகிறது

(மந்திகை)

நேற்று முன்தினம் முதல் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்கள் இறக்கும் பணி வழமை போல் இடம் பெறுகிறது.

524வதுபடையணி, தொழிலாளர்களை சில தினங்கள் அங்கு செல்ல அனுமதிக்காமையால் பொருட்களுடன் வந்த கப்பல் காங்கேசன் துறைக்கு திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்துருவலி கப்பலில் இருந்து சீமெந்து இறக்கப்பட்டு வருகின்றது.

(உ-23)

# ரணிலின் சமாதான முயற்சிக்கு லண்டன் பௌத்த சங்கம் பாராட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் துணிச்சலான சமாதான நடவடிக்கைகளை லண்டனிலுள்ள பௌத்த சங்கம் பாராட்டியுள்ளது.

இது குறித்து லண்டன் பௌத்த விகாரையின் விகாராதிபதி அதிவணக்கத்துக்குரிய பண்டிட் வஜிரஞான தேரர், பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் பாயிஸ் முஸ்தபா ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான செய்திகளை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம் மிக மோசமான இனப்பிரச்சினையானது எமது மக்களை மட்டுமன்றி நாட்டையும் நாட்டின் வளர்ச்சியையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

யுத்தத்தை ஒருபோதும் யுத்தத்தால் வெற்றிகொள்ள முடியாது.

சமாதானப் பாதையில் தடைகள் ஏற்பட்ட போதிலும் திருப்திகரமான பதில் கிடைக்கும். எனவே, உங்களின் முயற்சியைப் பாராட்டுகின்றோம் என்றுள்ளது. (உ)

## தினசரி தியானம்

### சகோதரப் பாசம்

இராமாயணத்தில் இலட்சுமணன் இராம பிரானிடத்தே கொண்டிருந்த பக்தியை எண்ணிப்பாருங்கள் இன்றைக்கு அதற்குமாறாக என்னென்ன பார்க்கிறீர்கள்? அற்பவிஷயங்களுக்காகச் சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். இது சிறுமையான வருந்தத்தக்க நிலையல்லவா? ஓ மனிதனே! இலட்சுமணனாகிய பெருமை மிக்க பாத்திரத்தையும். அவன் தன் சோதரனிடத்தே வைத்திருந்த பக்தியையும் எண்ணிப்பார்! அவனை முன் மாதிரியாக வைத்துக் கொள். அவனது உயர்ந்த குண நலன்களை எடுத்துக் கொள். சுயநலமின்றி சகோதரர்களை நேசிக்கக் கற்றுக் கொள். இல்லத்தில் மகிழ்ச்சியும், நிம்மதியும் பெறுவாய்.

சுவாமி சிவானந்தர்.

# எவ்வித வசதிகளுமின்றி காவலூர் தபாலகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தபாலகம் எதுவித வசதிகளுமற்ற நிலையில் இயங்கி வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

ஊழியர் பற்றாக்குறை, இடநெருக்கடி என்பன இங்கு நிலவுவதால் பொது மக்கள் தபாலக சேவைகளை முழுமையாகப் பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளது.

(உ-75)

# புலிகள் மீதானதடைநீக்கம் சிஹல உறுமய சீற்றம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை தற்காலிகமாக அரசாங்கம் நீக்கியதன் மூலம் அவர்களுக்கு நற்பெயரையும் கௌரவத்தையும் அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று சிஹல உறுமய கட்சித்தலைவர் திலக் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசாங்கம் தற்காலிகமாக நீக்கியதையடுத்து சிஹல உறுமய கட்சித் தலைவர்திலக்கருணாரத்தினா மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நூற்றுக்கணக்கான சிங்கள மக்களையும், சிங்களத் தலைவர்களையும் தற்கொலைத் தாக்குதல் மூலம் கொன்றுகுவித்துள்ளது.

அத்துடன் தலதாமாளிகைக்கு குண்டுவைத்தமை உட்பட மற்றும் பல குண்டு வெடிப்புகளோடு சம்பந்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

அவர்கள் மீதான தடை நீக்கப்பட்டிருப்பதை உடன் தடுத்து நிறுத்துமாறும் விடுதலைப்புலிகள் மீது மீண்டும் தடைவிதிக்குமாறும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை வலியுறுத்தப் போவதாகவும் திலக் கருணாரத்தினா மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# ஆவணிப் பூரத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தான ஆவணி மாதப் பூரத்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (உ-3)

# புலிகளின் தடை நீக்கத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகள் ஒன்று சேரவேண்டும்

## ஜே.வி.பியின் பொதுச் செயலர் அறைகூவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு ஆயு தங்களை கீழேவைக்க முன்வந்தால் அவர்கள் மீதான தடை நீக்கப்படுவ தில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

ஆனால் நிபநதனை கள் எதுவுமின்றி தான்தோன்றித்தனமாக புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்கியுள்ளது.

இதன் முலம் எதிர் காலத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதர் நோக்க வேண்டி ஏற்படும் என்றும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித் துள்ளார். (த)

# அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஊடகவியலாளர்கள் உதவவேண்டும்

## அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வேண்டுகோள்

(குருநாகல்)



அரசுக்கும் விடுதலைப்புலிகளுக் கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தை யில் மக்கள் அனைவரும் கட்சி பேதமின்றி ஒத்துழைக்க வேண்டுமென ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக் கார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குருநாகல் மாவட்ட பிரதேச ஊட கவியலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் வைபவத்திலேயே அமைச்சர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசு கையில்:

கடந்த அரசாங்கம் எட்டுவருட ஆட்சிக் காலத்தில் சாதிக்காதவற்றை நாம் இப்போது சாதித்துவருகின் றோம். ஊடக த்துறையுடன் சம்பந் தப்பட்ட ஊடகவியலாளருக்கு தற்போது மாவட்ட ரீதியாக அடையாள அட்டை களை வழங்கி வருகின்றோம்.

ஊடகவியலாளர்கள் அரசின சமாதான முயற்சிகளுக்கு உந்து சக்திகளாக இருந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக கொண்டார. (ம)

# மெற்றாஸ் மயிலுக்கு இன்று பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கலைக்காவலன் செல் லையா மெற்றாஸ் மயிலின் கலைச் சேவையைப் பாராட்டிக் கௌரவிக் கும் விழா இன்று காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் விழாக்குழுத் தலைவர் பொன்.தர்மேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.அரச அதி பர் க.சண்முகநாதன் முதன்மை விருந் தினராகவும்,

துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசி ரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், இந்து சமய விவகார அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன், யாழ்.மாநகர சபை முதல்வர் செ.கந்தையன், கலா நிதி குணராசா உட்பட பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள் ளவுள்ளனர். ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வரும்,வணபிதா பி.எம்.இம்மா னுவெல் அடிகளாரும் வழங்குவர்.

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பணம்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கல மாதாகோவில் வரு டாந்த திருநாள் திருப்பலி நாளை காலை இடம் பெறவுள்ளது.

திருப்பலியைத் தொடர்ந்து திருச சொரூபபவனி இடம்பெறும். (த)

## மெய்வல்லுநர் போட்டி

(மந்திகை)

சமரபாகு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவில் வருடாந்த மெய் வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்குகொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையில் நடை பெறவுள்ளது.

எஸ்.இன்பரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் விடுத லைப்புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-23)

## உலகவங்கிக்குழு யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் தூதுக்குழு ஒன்று நாளை மறுதினம் திங்கட்கி ழமை யாழ்ப்பாணம் வருகை தர வுள்ளது.

காலை 9மணியளவில் யாழ் செயலகத்தில் நடை பெறும் மாநாட்

## கண்காணிப்பு...

பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கண் காணிப்புக்குழு உறுப்பினர் போல் எரிக் பிஜேர்ப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்திலேயே மேற்கண் டவாறு இணக்கம் காணப்பட்டது.

மாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்பதற்கு ஏற்ற சுழல் உரு

## கைதிகள் பரிமாற்றம்

# சிறையில் இல்லாதவரின் பெயர் பட்டியலில் உள்ளதாம்

(கொழும்பு)

அரசும் விடுதலைப் புலிகளும் பரிமாற உத்தேசித்துள்ள கைதி களின் பரிமாற்றத்தின் கீழ் வடலிய டைப்பைச் சேர்ந்த குமரேசன் கம லேஸ்வரன் என்பவரது பெயர் பட்டி யலில் இடம் பெற்றிருந்த போதும் அவர் ஏற்கனவே காணாமல் போய விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. கைது செய்யப்பட்டோரின் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள் ளது.

இது தொடர்பானவிசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு பாது காவலர் சங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைக் கோரியுள் ளது.

காணாமல் போனதாகக் கரு தப்படும் குமரேசன் கமலேஸ்வரன் 1996ம் ஆண்டு அளவெட்டியில் காணாமல் போனதாகவும், இது தொடர்பாகச் சிறைகளில் தேடுதல் மேற்கொண்ட போதும் அங்கு அவர் காணப்படவில்லை என்றும் அப்படிக் காணப்படாத ஒருவரின் பெயர் கைதிகளின் பரிமாற்றப்பட் டியலில் இடம்பெற்றிருப்பது எவ்வாறு என்றும் இவர் எங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்தார் என்றும் சங் கம் கேள்வி எழுப்பியுள்ளது. (ம)

## 19வது சட்ட...

இக் கூட்டத்திலேயே மேற்படி தீர் மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது. இது தொடர்பாகக் கட்சி யின்பேச்சாளர் சரத்அமுனுகம தெரி விக்கையில், பொதுஜன ஐக்கிய முன்னணியை புறந்தள்ளிவிட்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங் கம் தனது நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகின்றது.

விடுதலைப் புலிகள்மீதான தடை நீக்கம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

நிரந்தரமாகவோ அல்லது தற்கா லிகமாகவோ புலிகளின் தடை நீக் கப்பபட்டது என்பதை வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடபபடவில்லை.

ஆனால் புலிகள் மீதானதடை தற்காலிகமாகவே நீக்கப்பட்டது என்று அரசாங்கம் பொய்ப்பிரசாரம் மேற் கொண்டுவருகின்றது.

அதேவேளை 19வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை பாரா ளுமன்றில் தோற்கடிப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

அதேவேளை பாராளுமன்றக் குழுக் கூட்டத்திற்குச் சமுகமளிக்காத நாடா ளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌஸி, றிச்சட்பத்திரான ஆகியோ ருடன் பேச்சு நடத்தவுள்ளோம்.

மக்கள் விடுதலை முன்னணி யுடனும் இது விடயம் குறித்துப் பேசவுள்ளோம். மக்கள் விடுதலை முன்னணிதாமாக முன்வந்து 19வது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தை தோற்கடிக்கும் எனத் தாம் எதிர்பார்ப் பதாகவும் சரத்அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார். (த)

## புலிகள் மீது..

கள் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரும் உடன் இருந்தார்கள். (ம)

## தமிழ்க்காங்கிரஸ்...

சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை பருத்தித்துறைப் பாடசாலை விபரங்களை நேரில் கண்டறிவதற்காகப் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள் ளார். (இ)

## சமாதானப்...

இதேவேளை அமைச்சர் ஹக்கீம் செப்ரெம்பர் 16 தொடக்கம் 18 வரையி லான முதல்சுற்றுப் பேச்சுக்களில் அரச தரப்பு பிரதிநிதியாகவும் அதற்குப் பின் பான பேச்சுக களின்போது முஸ்லிம் சமூகத்தின பிரதிநிதியாகவும் கலந்து கொளவார். (ந-5)

## பாதுகாப்பு...

டுள்ளது.

இதன் மூலம் புலிகள் தனி நாடு ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளதாகவே கருதவேண்டுமெனறும் சிஹல உறுமய குற்றம் சாட்டியுள்ளது. (த)

## விடுதலைப்புலிகள் மீதான தடையை...

### பேரினவாதிகள் முயற்சி வெற்றியளிக்காது

நாடுகள் எமது அமைப்பைத்தடை செய்திருந்தன. ஆனால் எமது அமைப்பு எந்த நாடுகளுக்கோ, எந்த நாட்டு மக்களுக்கோ எந்தவித

தற்போது நடைபெறவுள்ள தாய் லாந்துப் பேச்சுவார்த்தைகளின் போது

பெரும்பான்மையான மக்களும் சர்வதேச சமூகமும் சமாதான முயற் சிகளை வரவேற்று தமிழ் மக்களுக்கு நிலையான அரசியல் தீர்வொன்றை முன்வைக்கவேண்டும் என்பதில் உறு

பா க.சலமுகநாத[illegible] வருந
தினராகவும்,

முதலவரும,வணபிதா பி.எம.இமமானுவெல் அடிகளாரும் வழங்குவர்.

எஸ்.இன்பரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-23)

பாடசாலை விபரங்களை நேரில் கண்டறிவதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். (இ)

டுள்ளது.

இதன் மூலம் புலிகள் தனி நாடு ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளதாகவே கருதவேண்டுமெனறும் சிஹல உறுமய குற்றம் சாட்டியுள்ளது. (த)

## உலகவங்கிக்குழு யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் தூதுக்குழு ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

காலை 9மணியளவில் யாழ் செயலகத்தில் நடை பெறும் மாநாட்டில் இத்தூதுக்குழுவினர் கலந்து கொள்வர். மின்சாரசபை அதிகாரிகள் ஜி.ரி.சற் நிறுவனப் பிரதிநிதிகள் யாழ் போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் வடக்குக்கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், கல் வி. பணிப்பாளர்கள், மற்றும் திணைக்கழகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இம்மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர். (த-19)

## கண்காணிப்பு...

பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கண்காணிப்புக்குழு உறுப்பினர் போல் எரிக் பிஜேர்ப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு இணக்கம் காணப்பட்டது.

மாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்பதற்கு ஏற்ற சுழல் உருவாக்கப்படவேண்டுமென்ற கருத்து கூட்டத்தில் கல்லூரிச் சமூகத்தவர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்து மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு இரு பாடசாலைகளுக்கும் முன்பாகப் பாடசாலை நுழைவாயில் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் பாடசாலை நாட்களில் கண்காணிப்புச் சேவையில் ஈடுபடவுள்ளனர். (இ-23)

## விடுதலைப்புலிகள் மீதான தடையை...

நாடுகள் எமது அமைப்பைத்தடை செய்திருந்தன. ஆனால் எமது அமைப்பு எந்த நாடுகளுக்கோ, எந்த நாட்டு மக்களுக்கோ எந்தவிதமான அச்சுறுத்தல்களையும் எந்தக் காலத்திலும் விடுத்ததில்லை.

அரசாங்கம் எமது அமைப்பின் மீதான தடையை இப்போது நீக்கியிருப்பது நிச்சயமாக, தமது தவறானதும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாததுமான தீர்மானங்களை வெளிநாடுகள் மறுபரிசீலனை செய்யக்கூடிய சூழ் நிலையை உருவாக்கியுள்ளதாக நாம் கருதுகிறோம்.

### இயல்பு வாழ்க்கை இன்னமும் திரும்பவில்லை

தற்போதைய சமாதான முயற்சிகள் கடந்த காலங்களை விட ஓரளவு முன்னேற்றகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டுள்ளது, பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ளது. இதனால் பொருட்கள் மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

புலிகள் மீதான தடை நீக்கம் போன்ற முன்னேற்றகரமான சம்பவங்கள் நடைபெற்றாலும் பொதுமக்கள் செறிவாக வாழுகின்ற பகுதிகளிலும் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் இருந்து இராணுவம் விலகி மக்கள் இயல்பாக வாழக்கூடிய, நடமாடக் கூடியதான மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் குடியேறக் கூடியதான வழிவகைகள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

இச்சமாதான முயற்சிகள் பல முன்னேற்றகரமான நிகழ்வுகள் நடந்தாலும் பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாதிருப்பது ஒரு பின்னடைவாகவும், நெருடலை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. இத்தகைய நெருடல்களை சமாதான முயற்சிக்கு அனுசரணையாக இருக்கின்ற நோர்வே அரசிற்கூடாக இலங்கை அரசிற்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

### பேரினவாதிகள் முயற்சி வெற்றியளிக்காது

தற்போது நடைபெறவுள்ள தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின் போது யுத்த நிறுத்த உடன்படிக்கையினை இரண்டு தரப்பும் எற்றுக்கொண்டதன் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களை உறுதியாக வலியுறுத்தி அவற்றை நடைமுறைப் படுத்த முயல்வோம்.

பெரும்பான்மையான மக்களும் சர்வதேச சமூகமும் சமாதான முயற்சிகளை வரவேற்று தமிழ் மக்களுக்கு நிலையான அரசியல் தீர்வொன்றை முன்வைக்கவேண்டும் என்பதில் உறுதிப்பாட்டுடன் இருக்கும் நிலையில் சிங்களப்பேரினவாதிகளின் எதிர்ப்பு முயற்சிகள் வெற்றியளிக்கும் என நான் கருதவில்லை என்றும் சு.ப. தமிழ்ச்செல்வன் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார். (ம)



தமிழீழ சுகாதார சேவையினரும் நோய்த்தடுப்பு பிரிவினரும் தியாகிதிலீபன் ஞாபகார்த்த மருத்துவக் குழுவினரும் ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனைப் பகுதி மக்களுக்கு கொலரா நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கின்றனர்.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி

**பரமேஸ்வரன் சுவேதிகா**

நெடுந்தீவு மேற்கு 3ம் வட்டாரத்தில் வசிக்கும்

பரமேஸ்வரன் – ஜெனனி தம்பதிகளின் செல்வப்புதல்வி சுவேதிகா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (07.09.2002) சனிக்கிழமை இல39 நாவலர் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, அப்புமார், பேத்திமார், மாமாமார், ஆசைஅம்மா, ஆசைஅப்பா, அன்ரி, சித்தப்பாமார், பெரியப்பாமார், மாமிமார், பெரியம்மாமார், மற்றும் உற்றார், உறவினர் யாவரும் நெடுந்தீவு நெழுவினி சித்தி விநாயகர் அருள்பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

3ம் வட்டாரம்
நெல்லரை, நெடுந்தீவு [C/4968] வி.ஜனார்த்தன் (மாமா)

## தீவுப்பகுதி மக்களுக்கு

**நோயாளிகளின் கவனத்திற்கு**

நாள்பட்ட நோய்களை குணப்படுத்துவதற்கும் சிறு குழந்தைகளின் எண்ணை வகைகளுக்கும், வாதரோகங்களுக்கும், கரப்பான்கடி, சொறி, சிரங்கு, எக்சிமா, சத்தி, செங்கண்மாரி, குடர்ப்புண், காமாலை, சோகை, நரம்புத்தளர்ச்சி, தலைமுடிஉதிர்தல், புழுவெட்டு, நோவு ஆகியவற்றிற்கு விசேடமாக சித்த ஆயுள்வேத முறைப்படி நோயாளிகளுக்கு தகுந்தபடி சிகிச்சை அளிக்கபபடும். தேமல், பேன், தொய்வு , மது அருந்துவதை தடுத்தல் போன்றவற்றிற்கு

**இன்றே நாடுங்கள்.**

**Ward No.5A, Nainativu.**

SRI GANESHA GNANAPAMDITHA DISPENSERY (MEDICAL HOME)
Prop.Dr.s . LOGANATHAN

[5879]



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 07.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.